
தினபூமி
thinaboomi.com
பூமி: 30 சுற்று: 276 ஆனி 30
TN-TVL/25/2012-2014
நெல்லை, திங்கள், ஜூலை 14, 2025
சென்னை · மதுரை · திருச்சி · கோவை · நெல்லை · சேலம் · வேலூர் · புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



## இந்தியாவுக்கு எதிராக பாக். அணு அயுதங்களை பயன்படுத்த திட்டமா? பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் மறுப்பு

...2-ம் பக்கம்

## மாநிலங்களவை உறுப்பினராக நியமனம்: உஜ்வால் நிகாமுக்கு பிரதமர் நரேந்திரமோடி வாழ்த்து

...3-ம் பக்கம்

## இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட்: 9-வது முறையாக 2 அணிகளும் ஒரே ஸ்கோர்: இந்தியா சாதனை

...6-ம் பக்கம்





● சென்னை காமராசர் அரங்கத்தில் நேற்று நடைபெற்ற விழாவில் கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய "வள்ளுவர் மறை வைரமுத்து உரை" நூலினை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட அதனை முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் பெற்றுக்கொண்டார். இவ்விழாவில் வெ.இறையன்பு, (ஓய்வு), பர்வீன் சுல்தானா, அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் அறிஞர்கள், பேராசிரியர் பெருமக்கள், கல்வியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஆதரவு பெருகப்பெருக பொறுப்பும், கடமையும் கூடுகிறது:

# மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்ற நாம் கடினமாக உழைக்க வேண்டும்

### தி.மு.க. நிர்வாகிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை

சென்னை, ஜூலை 14-

**மக்கள் ஆதரவு பெருகப் பெருக பொறுப்பும், கடமையும் கூடுகிறது. எதிர்பார்ப்பு அதிகம் ஆகிறது, அதனைக் காப்பாற்ற நாம் அனைவரும் கடினமாக உழைத்தாக வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தி.மு.க. நிர்வாகிகளுக்கு வலியுறுத்தியுள்ளார்.**

**எதிர்பார்ப்பு அதிகம்...**

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், 'உடன்பிறப்பே வா' என்ற தலைப்பில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் சட்டப்பேரவை தொகுதி வாரியாக நிர்வாகிகளை நேருக்கு நேர் சந்தித்து ஆலோசனைகள் வழங்கி வருகிறார் தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின். அந்த வகையில், நேற்று 'உடன்பிறப்பே வா' கூட்டத்தில் தி.மு.க. நிர்வாகிகள் இடையே மு.க.ஸ்டாலின் பேசுகையில் "மக்கள் ஆதரவு பெருகப் பெருக பொறுப்பும், கடமையும் கூடுகிறது. எதிர்பார்ப்பு அதிகம் ஆகிறது, அதனைக் காப்பாற்ற நாம் அனைவரும் கடினமாக உழைத்தாக வேண்டும்," என அறிவுறுத்தியுள்ளார்.

**மறந்ததில்லை...**

இது குறித்து தி.மு.க. வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: பொதுமக்களுக்கான அரசாகத் திராவிட மாடல் அரசு திகழ்ந்து வரும் நிலையில், இப்படியொரு அரசு அமைந்திட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பத்தாண்டுகளாகப் பாடுபட்ட கழகத் தொண்டர்களின் அளப்பரிய உழைப்பே, உங்களில் ஒருவனான நான், முதல்வர் பொறுப்பை ஏற்பதற்கு அடிப்படையாக அமைந்தது என்பதை ஒருபோதும் மறந்ததில்லை.

> **மக்கள்ஆதரவைகாப்பாற்ற நாம் அனைவரும் கடினமாக உழைத்தாக வேண்டும். அதிகமாக உழைக்க நான் தயாராக இருக்கிறேன்.வளர்ச்சிஎன்பதுஎன்னால் மட்டும் ஆனதல்ல; உங்கள் ஒவ்வொருவரின் ஆக்கபூர்வமான நடவடிக்கையால் வளர்ந்து வரும். இந்த வெற்றியை பெற்றுத் தரநீங்கள்அனைவரும்அயராது பாடுபட வேண்டும்.**
> **- மு.க.ஸ்டாலின்**

**பிரச்சார பயணம்...**

மக்களின் கோரிக்கைகளைக் கேட்பது போல, கழகத்தினரின் மனக்குரலை அறிந்துகொள்வதற்காகத்தான் அறிவாலயத்தில், 'உடன்பிறப்பே வா' எனும் தொகுதிவாரியான நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் நடைப்பெற்று வருகிறது. 'உடன்பிறப்பே வா' எனும் கழக நிர்வாகிகளின் மனம் திறந்த சந்திப்பின் அனுபவம் எப்படி இருந்தது என்பதை அதில் பங்கேற்ற ஒவ்வொரு தொகுதியின் நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் நிர்வாகிகள் நன்கு அறிவார்கள். மக்களுக்கான திராவிட மாடல் அரசின் திட்டங்களும்

(கடைசி பக்கம் பார்க்க)

### வரும் 16, 17-ம் தேதிகளில் சென்னை உள்ளிட்ட

## 6 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூலை14-

**தமிழகத்தில் வரும் 16, 17 தேதிகளில் சென்னை, திருவள்ளூர் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.**

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்றும் ஒரிரு இடங்களிலும், 16-ம் தேதி முதல் 19-ம் தேதி வரை ஒருசில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று நீலகிரி மாவட்டம் மற்றும் கோவை மாவட்டங்களிலும், 16, 17 தேதிகளில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, நீலகிரி மாவட்டங்கள் மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. 18, 19 தேதிகளில் நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலை

(கடைசி பக்கம் பார்க்க)

### தி.மலையில் தி.மு.க., பாக முகவர்கள் கூட்டம்:

## சட்டமன்ற தேர்தல் ரேசில் யாராலும் பிடிக்க முடியாத தூரத்தில் தி.மு.க.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்

திருவண்ணாமலை,ஜூலை14-

**தேர்தல் ரேசில் யாராலும் பிடிக்க முடியாத தூரத்தில் முதலிடத்தில் சென்று கொண்டு இருக்கிறோம் என்று துணை முதல்வர் உதயநிதி கூறி உள்ளார்.**

திருவண்ணாமலையில் தி.மு.க., பாக முகவர்கள் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார். அப்போது உதயநிதி பேசியதாவது;

தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி அமைந்தவுடனே முதல்வர் கையெழுத்திட்டது மகளிருக்கான விடியல் பயணத்திட்டம் தான். இந்த திட்டங்களினால் 4 மாதங்களில் மட்டும் 730 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கின்றனர்.

புதுமைப்பெண் திட்டம். 8 லட்சம் பேர் இந்த திட்டத்தில் பயன்பெற்றுள்ளனர். முதல்வர் காலை உணவுத் திட்டத்தில் நல்ல தரமான உணவு வழங்கப்படுகிறது.

இந்தியாவே திரும்பி பார்க்க வைக்கும் திட்டம் மகளிர் உரிமைத் தொகை திட்டம். 22 மாதங்களாக 1. 15 கோடி பேர் மாதம் தோறும் மகளிர் உரிமைத் தொகையை பெற்றுள்ளனர்.

இந்த திட்டங்கள் பெரிய ளவில் தமிழகத்தில் வரவேற்பை பெற்றுள்ளதால் மத்திய அரசு தமிழகத்துக்கு, தமிழக மக்களுக்கு தொடர்ந்து தொந்தரவு கொடுத்து வருகிறது.

புதிய கல்விக் கொள்கை என்ற குறுக்கு வழி மூலம் ஹிந்தியை தமிழகத்தில் நுழைக்க பார்க்கின்றனர்.

மறு சீரமைப்பு என்று கூறி லோக்சபா தொகுதிகளை குறைக்க பார்க்கின்றனர்.

தமிழகத்தின் நிதி உரிமையை பறிக்கும் வேலைகளை மத்திய அரசு தொடர்ந்து செய்து வருகிறது. தேர்தல் ரேசில் யாராலும் பிடிக்க முடியாத தூரத்தில் முதலிடத்தில் சென்று கொண்டு இருக்கிறோம். அடிமை அ.தி.மு.க., பா.ஜ., ஆட்சி தமிழகத்தில் வரக்கூடாது என்ற பிரசாரத்தை மக்களிடம் கொண்டு போய் சேருங்கள்.

தமிழகத்தில் பாஜ.,வுக்கு பாதை போட்டுக் கொடுக்கலாம் என்று பார்க்கிறீர்கள். தமிழக மக்கள் என்றைக்கும் அதை அனுமதிக்க மாட்டார்கள். தமிழக மக்கள் ஓரணியில் நின்றுகொண்டு அடிமைகளையும், பாசிசத்தையும் வீழ்த்த போவது உறுதி.

இவ்வாறு உதயநிதி பேசினார்.

### 'உங்களுடன் ஸ்டாலின் திட்டம்' தொடக்கம்:

## முதல்வர் ஸ்டாலின் இன்று ரயிலில் சிதம்பரம் பயணம்

சென்னை, ஜூலை 14-

**'உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை துவக்கி வைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று மாலை ரயில் மூலம் சிதம்பரம் செல்கிறார். நாளையும், நாளை மறுநாளும் மயிலாடுதுறையில் புதிய திட்டப்பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.**

தமிழ்நாடு முழுவதும் நாளை (ஜூலை 15ம் தேதி) உங்களுடன் ஸ்டாலின் திட்டம் தொடங்கப்பட உள்ளது. இதற்கான முதல் முகாமினை, 15.07.2025 அன்று தமிழ்நாடு முதல்வர் கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்க உள்ளார். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தைத் தொடங்கி வைக்க இன்று மாலை சென்னை எழும்பூரிலிருந்து ராமேஸ்வரம் விரைவு ரயிலில் முதல்வர் சிதம்பரம் செல்கிறார். சிதம்பரம் நகராட்சியில் ஜூலை 15ல் நடைபெறும் நிகழ்ச்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார்.

நாளையும், நாளை மறுநாளும் (ஜூலை 15 மற்றும் 16-தேதிகளில்) மயிலாடுதுறை மாவட்டத்தில் களப்பணிகளை நேரில் ஆய்வு செய்த பிறகு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். ஜூலை 16ம் தேதி சோழன் விரைவு ரயிலில் சென்னை திரும்புகிறார். இந்தத் திட்டம் ஜூலை 15 முதல் நவம்பர் மாதம் வரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும். தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழகம் முழுவதும், உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் சுமார் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இந்த முகாம்களில்தான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் மட்டுமே வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 4 பேருக்கு நியமன எம்.பி. பதவி: ஜனாதிபதி திரௌபதி அறிவிப்பு






புதுடில்லி, ஜூலை 14-

**4 பேருக்கு நியமன எம்.பி., பதவியை ஜனாதிபதி திரௌபதி முர்மு அறிவித்து உள்ளார். ராஜ்யசபா எம்.பி.,யாக அறிவிக்கப்பட்டுள்ள 4 பேருக்கும் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

4 பேருக்கு நியமன எம்.பி., பதவியை ஜனாதிபதி திரௌபதி முர்மு அறிவித்து உள்ளார். அதன் விபரம் பின்வருமாறு: மும்பை பயங்கரவாத தாக்குதல் வழக்கை அரசு தரப்பில் முன் நின்று நடத்திய வக்கீல் உஜ்வல் நிகம், கேரளாவைச் சேர்ந்த கல்வியாளர் சதானந்தன் மாஸ்டர், முன்னாள் வெளியுறவு செயலாளர் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்ளா, வரலாற்று ஆய்வாளர் மீனாட்சி ஜெயின் ஆகிய 4 பேரும் ஜனாதிபதியால் ராஜ்யசபாவுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் விரைவில் ராஜ்யசபா தலைவர் பொறுப்பு வகிக்கும் துணை ஜனாதிபதி முன்னிலையில் எம்.பியாக பதவியேற்பர். நியமன எம்.பி., ஆக அறிவிக்கப்பட்டுள்ள 4 பேருக்கும் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்து உள்ளார். இது குறித்து அவர் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது: சட்டத்துறையிலும், நமது அரசியலமைப்பிலும் உஜ்வால் நிகாமின் அர்ப்பணிப்பு முன்மாதிரியானது. அவரை ராஜ்யசபா எம்.பி., யாக ஜனாதிபதி நியமித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. சதானந்தன் மாஸ்டர் ஜனாதிபதியால் ராஜ்யசபாவுக்கு பரிந்துரைக்கப்பட்டதற்கு வாழ்த்துக்கள்.

முன்னாள் வெளியுறவு செயலாளர் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்ளா ஜனாதிபதியால் ராஜ்யசபாவுக்கு பரிந்துரைக்கப்பட்டதில் மகிழ்ச்சி. அவரது தனித்துவமான கண்ணோட்டங்கள் பார்லி., நடவடிக்கைகளை பெரிதும் வளப்படுத்தும். வரலாற்று ஆய்வாளர் மீனாட்சி ஜெயின் ஜனாதிபதியால் ராஜ்யசபாவுக்கு பரிந்துரைக்கப்பட்டு இருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. அவர் ஒரு அறிஞர், ஆராய்ச்சியாளர் மற்றும் வரலாற்றாசிரியர் என தன்னை வேறுபடுத்திக் கொண்டுள்ளார். அவரது பார்லி., எம்.பி., பதவிக்காலத்திற்கு வாழ்த்துக்கள். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

## திருவள்ளூரில் சரக்கு ரயில் தடம்புரண்டு பயங்கர தீவிபத்து

திருவள்ளூர், ஜூலை 14-

**திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே கச்சா எண்ணெய் ஏற்றிச் சென்ற சரக்கு ரயில் தடம் புரண்டு, பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. ரூ.12 கோடி மதிப்பிலான டீசல் தீயில் எரிந்து நாசமானது.**



திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே கச்சா எண்ணெய் ஏற்றிச் சென்ற டேங்கர் ரயில் தடம் புரண்டு, பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

சென்னை, மணலி ஐ.ஓ.சி. எல்-இல் இருந்து, சரக்கு ரயில் ஒன்று, 52 டேங்கர்களில் கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு நேற்று (ஜூலை 13) அதிகாலை மைசூர் நோக்கி சென்று கொண்டிருந்தது. அந்த ரயில், திருவள்ளூர் ரயில் நிலையத்தை கடந்து சென்ற போது, எதிர்பாராத விதமாக ரயில் என்ஜின் தடம் புரண்டது. இதனால், சுமார் 70 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கச்சா எண்ணெய் டேங்கர்களில் உரசல் ஏற்பட்டு ஒரு டேங்கரில் தீப்பற்றியது. அந்த தீ மளமளவென அடுத்தடுத்த 6 டேங்கர்களுக்கும் பரவி, கொழுந்து விட்டு எரிந்தது.

இதுகுறித்து, தகவலறிந்து, திருவள்ளூர், திரூர், கும்மிடிப்பூண்டி சிப்காட் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து தீயணைப்பு நிலைய வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து, ரசாயனம் கலந்த நீரை பீய்ச்சி அடித்து தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இதற்கிடையே, தகவல் அறிந்த திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் பிரதாப், திருவள்ளூர் எஸ்.பி., சீனிவாச பெருமாள், தெற்கு ரயில்வேயின் சென்னை மண்டல மேலாளர் விஸ்வநாத் ஈர்யா, ரயில்வே ஐஜி ராமகிருஷ்ணன், எஸ்பி ஈஸ்வரன் உள்ளிட்டோர் சம்பவ இடம் விரைந்து, தீயை அணைக்கும் பணியை துரிதப்படுத்தினர்;

விபத்தால் ரயில் பாதையில் உள்ள சிக்னல் ஃபோர்டுகள், மின்இணைப்புகள் சேதமடைந்தன. இதனால், சென்னை - அரக்கோணம் ரயில்வே மார்க்கத்தில் சென்னை நோக்கி வந்த விரைவு ரயில்கள் அரக்கோணம் உள்ளிட்ட பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளன; சென்னையில் இருந்து, ஜோலார்பேட்டை, மைசூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும் மின்சார ரயில்கள், விரைவு ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

சரக்கு ரயில் டேங்கருக்கு 70,000 லிட்டர் வீதம் மொத்தமாக 18 டேங்கர்களில் 12.60 லட்சம் லிட்டர் டீசல் நிரப்பப்பட்டிருந்தது. சரக்கு ரயில் தீ விபத்தில் ரூ. 12 கோடி மதிப்பிலான டீசல் தீயில் எரிந்து நாசமாகி உள்ளது. சரக்கு ரயிலில் காலை 5 மணி அளவில் ஏற்பட்ட தீ தற்போது முழுவதும் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. ரயில் தீ விபத்து குறித்து விசாரிக்க ரயில்வே ஏ.டி.ஜி.பி. தலைமையில் 3 தனிப்படை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ரயிலில் தீ விபத்து ஏற்பட்ட இடத்தில் தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என். சிங் நேரில் ஆய்வு செய்தார்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -689.81 | -205.40 |
| பாயின்ட் 82,500.47 | பாயின்ட் 25,149.85 |



**தங்கம்**
1 சவரன் ₹72,160
1 கிராம் ₹9,020



**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹85.86




**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

# இந்தியாவுக்கு எதிராக பாக்., அணு அயுதங்களை பயன்படுத்த திட்டமா?

## பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் மறுப்பு

**இஸ்லாமாபாத், ஜூலை 14-** இந்தியா உடனான அணு மையை மோதலில் அணு ஆயுதத்தை பயன்படுத்தும் திட்டம் தங்களுக்கு அறவே இல்லை என பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் கூறியுள்ளார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை அடுத்து இந்தியா 'ஆபரேஷன் சிந்தூர்' ராணுவ நடவடிக்கை மூலம் பாகிஸ்தானில் இருந்த தீவிரவாத முகாம்களை தாக்கி அழித்தது. தொடர்ந்து பாகிஸ்தான் தரப்பில் இருந்து எல்லையோர இந்திய மாநிலங்கள் குறிவைக்கப்பட்டன. அந்த தாக்குதலை இந்திய ராணுவம் இடைமறித்து அழித்தது. பாகிஸ்தானுக்கு தகுந்த பதிலடி கொடுத்தது.



இந்நிலையில், இந்த மோதல் குறித்து பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் சனிக்கிழமை அன்று மாணவர்களுடன் இஸ்லாமாபாத் நகரில் உரையாடினார். அப்போது, இந்தியா உடனான நான்கு நாள் நீடித்த அணு மைய மோதலை அவர் நினைவுகூர்ந்தார். "நமது அணுசக்தி திட்டம் முற்றிலும் தேசத்தின் தற்காப்பு ரீதியான நடவடிக்கையை சார்ந்தது. அதன் நோக்கம் அமைதியை நோக்கியது. தாக்குதல் நடத்த அல்ல. இந்தியா உடனான மோதலில் 55 பேர் உயிரிழந்தனர். இந்தியாவின் தாக்குதலுக்கு நாம் பதிலடி கொடுத்தோம்" என ஷெபாஸ் ஷெரீப் கூறியுள்ளார்.

இந்தியா அணுசக்தி பலம் படைத்த நாடு என்பதால் இந்தியா - பாகிஸ்தான் இடையிலான மோதல் உலக நாடுகளை வருத்தச் செய்தது. இந்நிலையில், இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம் மோதலை முடிவுக்கு கொண்டு வந்தன. போரை தாமே முடிவுக்குக் கொண்டு வந்ததாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

### இந்திய மாணவர் சேர்க்கை குறைவால்

# கனடா பல்கலை, கல்லூரிகளில் வேலை இழந்த 10 ஆயிரம் பேர்..!

**ஒன்டாரியோ, ஜூலை 14-** கனடா பல்கலை மற்றும் கல்லூரிகளில் இந்திய மாணவர்களின் சேர்க்கை வெகுவாக குறைந்ததால் நிதி நெருக்கடியில் சிக்கிய கல்வி நிறுவனங்கள் பேராசிரியர்கள், நிர்வாக பணியாளர்கள் என 10,000 பேரை பணி நீக்கம் செய்துள்ளன.

காலிஸ்தான் பயங்கரவாதிகள் தொடர்பான பிரச்னையில், நம் நாட்டுக்கும், வட அமெரிக்க நாடான கனடாவுக்கும் இடையேயான உறவில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், வட அமெரிக்க நாடான கனடாவில் உயர் கல்வி படிப்பதற்காக, இந்திய மாணவர்கள் அதிகளவில் சென்று வந்தனர். அந்நாட்டு அரசு வெளிநாட்டு மாணவர்கள் சேர்க்கைக்கு கடும் கட்டுப்பாடுகளை விதித்தது.

மாணவர் விசாவுக்கான எண்ணிக்கையில் வரம்பை நிர்ணயித்தது. இந்த கட்டுப்பாடுகள் வெளிநாட்டு மாணவர்களை நம்பியுள்ள அந்நாட்டின் கல்லூரிகளுக்கே விளைவுகளை ஏற்படுத்தியது. கனடாவின் ஒன்டாரியோ நகரில் உள்ள கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் இந்தியர்கள். இந்தாண்டு விதித்த கட்டுப்பாடுகள் இந்திய மாணவர்களின் சேர்க்கை குறைந்தது.

அதை ஈடுசெய்ய அரசிடம் அவசர நிதியுதவி வழங்க கல்லூரி நிர்வாகங்கள் கோரின. ஆனால் அதுவும் கிடைக்கவில்லை. இதனால் பல கல்லூரிகள் துறைகளின் எண்ணிக்கையை குறைத்துள்ளன. 10,000க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், நிர்வாக பணியாளர்களை பணி நீக்கம் செய்துள்ளன. அரசு தலையிடாவிட்டால் கல்லூரிகளில் பணி நீக்கம் அதிகரிக்கும் என ஒன்டாரியோ அரசு ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் கூறினார்.



சென்னையில் நடைபெற்ற சத்யபாமா பல்கலைக்கழகத்தின் வேந்தர் மரியஜீனா ஜான்சன் மரியஜான்சன் தம்பதியரின் மகள் மகிய கேத்தரின் ஜெயப்பிரியா-ஆகாஷ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரக்கன்று பசுமைக்கூடா வழங்கி மணக்களை வாழ்த்தினார்.

### எல்லை தாண்டி மீன் பிடித்ததாக

# இலங்கை கடற்படையினரால் 7 தமிழ்நாடு மீனவர்கள் கைது

**ராமேசுவரம், ஜூலை 14-** எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி, தமிழக மீனவர்கள் 7 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மேலும், அவர்கள் சென்ற படகையும் பறிமுதல் செய்துள்ளனர்.

ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து சுமார் 500 விசைப் படகுகளில் 3 ஆயிரம் மீனவர்கள் சனிக்கிழமை (நேற்று முன்தினம்) கடலுக்குச் சென்றனர். இதில் ஈசாக் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் ரூதர், சண்முகம், எடிசன், சக்திவேல், ஜெகதீஷ், டல்வின் ராஜ், அன்பழகன் ஆகிய 7 மீனவர்கள் நெடுந்தீவு அருகே உள்ள கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த் இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி 7 பேரையும் கைது செய்தனர்.

சிறைப்பிடிக்கப்பட்ட 7 மீனவர்களும் காங்கேசன் துறை கடற்படை முகாமிற்கு கொண்டு சென்று அந்நாட்டு மீன்வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தொடர்ந்து 7 மீனவர்களையும், ஊர்காவல்துறை நீதிபதியின் வீட்டில் ஆஜர்படுத்தப்பட்டு, யாழ்ப்பாணம் சிறையில் (நேற்று) ஞாயிற்றுக்கிழமை மாலை அடைக்கப்பட்டனர். இதேபோல், சனிக்கிழமை இரவு கச்சத்தீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்த மரிய சீரோன் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகை சிறைப்பிடிக்க முயன்ற இலங்கை கடற்படை ரோந்துப் படகு, மீனவர்களின் விசைப்படகு மீது மோதியதில் விசைப்படகின் பின் பகுதி உடைந்து சேதமடைந்தது. அப்படகில் இருந்த ஸ்டாலின், முனீஸ்வரன், வியாகுலம், கொலம்பஸ், நாகேஷ், ஸ்டீபன், சரத்குமார் ஆகிய ஏழு மீனவர்களும் அதிர்ஷ்டவசமாக தப்பி ராமேசுவரம் மீன்பிடி துறைமுகம் வந்தடைந்தனர்.

மேலும், கடந்த ஒரு மாதத்தில் ராமேசுவரம் மீனவர்களின் மூன்று விசைப்படகுகளை கைப்பற்றி, இலங்கை கடற்படையினர் 22 மீனவர்களையும் கைது செய்துள்ளது குறிப்பிடதக்கது.

# உல்பா பயங்கரவாதிகள் மீது இந்திய ராணுவம் தாக்குதல்

**கவுகாத்தி, ஜூலை 14-** தங்கள் முகாம் மீது இந்திய ராணுவம் ட்ரோன்களை வீசி தாக்குதல் நடத்தியது,'' என உல்பா பயங்கரவாத அமைப்பு தெரிவித்துள்ளது. ஆனால், அப்படி தாக்குதல் நடந்ததாக தகவல் ஏதும் இல்லை என இந்திய ராணுவம் கூறியுள்ளது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அசாமை பிரித்து தனி நாடு கேட்டு பாரேஷ் பருவா தலைமையிலான உல்பா பயங்கரவாத அமைப்பினர் போராடி வருகின்றனர். அந்த அமைப்புக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. இந்த அமைப்பினர், மியான்மர் எல்லைப் பகுதிகளில் பதுங்கி உள்ளனர்.

இந்நிலையில் இந்த அமைப்பினர் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: மியான்மர் எல்லையை ஒட்டியுள்ள நாகலாந்தின் லோங்வா முதல், அருணாச்சல பிரதேசத்தின் பங்சாய் கணவாய் வரையில், எங்கள் முகாம் மீது இந்திய ராணுவம் ட்ரோன்களை வீசி தாக்குதல் நடத்தியது. நேற்று அதிகாலை 2 மணி முதல் 4 மணி வரை 150க்கும் மேற்பட்ட ட்ரோன்களை வீசி தாக்குதல் நடத்தியது. இந்த ட்ரோன்கள் அனைத்தும் இஸ்ரேல் மற்றும் பிரான்சில் தயாரிக்கப்பட்டவை. இந்த தாக்குதலில், அமைப்பின் முக்கிய தளபதியாக விளங்கிய நயான் மெதி என்ற நயன் அசோம் உயிரிழந்தார். மேலும் 19 பேர் காயமடைந்தனர். ஞாயிற்றுக்கிழமை காலையிலும் இந்த தாக்குதல் தொடர்ந்தது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இது தொடர்பாக அசாம் தலைநகர் கவுகாத்தியில் உள்ள ராணுவ அதிகாரி ஒருவர், ட்ரோன் வீசி தாக்குதல் நடத்தியதாக இந்திய ராணுவத்திடம் எந்த தகவலும் இல்லை எனத் தெரிவித்துள்ளார். நாகாலாந்தில் உள்ள ராணுவ அதிகாரியும் இதே கருத்தை தெரிவித்துள்ளார்.

### உபரிநீர் வெளியேற்றம் நிறுத்தம்:

# மேட்டூர் அணையில் பாசனத்துக்கு நீர் திறப்பு

**மேட்டூர், ஜூலை 14-** மேட்டூர் அணையின் 16 கண் மதகுகள் வழியாக உபரிநீர் வெளியேற்றம் நேற்று காலை முதல் நிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து, பாசனத்துக்கு நீர் மின் நிலையங்கள் வழியாக 22,500 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

கர்நாடகவில் காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக, அங்குள்ள அணைகள் நிரம்பியது. இதையடுத்து, கபினி, கே.ஆர்.எஸ் அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் உபரிநீர் திறக்கப்பட்டது. நீர்வரத்து அதிகரித்தன் காரணமாக, மேட்டூர் அணைவரலாற்றில் முழு கொள்ளவான 120 அடியை கடந்த ஜூன் 29-ம் தேதி 44வது முறையாக எட்டியது. பின்னர், அணை நீர்மட்டம் சரிந்து மீண்டும் கடந்த ஜூலை 5-ம் தேதி நடப்பாண்டில் 2வது முறையாக முழு கொள்ளளவை எட்டியது. அணையின் பாதுகாப்பு கருதி, அணைக்கு வரும் நீர், அப்படியே காவிரி ஆற்றில் வெளியேற்றப்பட்டு வந்தது.

மேட்டூர் அணைக்கு நேற்று காலை 8 மணிக்கு நீர்வரத்து விநாடிக்கு 30,500 கன அடியாக இருந்தது. தொடர்ந்து நீர்வரத்து அணையில் இருந்து நீர்மின் நிலையங்கள் வழியாக விநாடிக்கு 22,100 கனஅடி, 16 கண் மதகுகள் வழியாக 7,900 கன அடி என மொத்தம் 30,000 கன அடி நீர் காவிரி ஆற்றில் வெளியேற்றப்பட்டு வந்தது.

# இஸ்ரேல் தாக்குதலில் ஈரான் அதிபர் காயம்!

**டெஹ்ரான், ஜூலை 14-** கடந்த மாதம் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரான் அதிபர் மசூத் பெஜஸ்கியான் காயம் அடைந்தாக தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதாகவும், இதனால் தங்களுக்கு ஆபத்து ஏற்படும் எனக்கூறி கடந்த மாதம் அந்நாடு மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. ட்ரோன், ஏவுகணைகள் பயன்படுத்தி இந்த தாக்குதல் நடந்தது. இதற்கு பதிலடியாக ஈரானும் தாக்குதலில் ஈடுபட்டது. இதில் பலர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர். அமெரிக்காவின் தலையீட்டால், இரு தரப்புக்கு இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டு உள்ளது.



இந்நிலையில், ஈரான் அதிபர் மசூத் பெஜஸ்கியான், ஈரான் பார்லிமென்ட் சபாநாயகர் முகமது பாகேர், நீதித்துறை தலைவர் மோசெனி எஜெய் உள்ளிட்டோர் கலந்து கொண்ட ஈரான் தேசிய கவுன்சில் கூட்டம் நடந்தது. இக்கூட்டம் நடந்த கட்டடத்தை குறி வைத்து, ஆறு ஏவுகணைகளை இஸ்ரேல் ஏவியது.

உடனடியாக ஆபத்து கால வழியாக அங்கிருந்த அனைவரும் வெளியேறினர். இருப்பினும், அதிபர் மசூத் ஜெஜஸ்கியான் உட்பட சிலர் காயமடைந்தனர் என ஈரான் புரட்சிகரப்படையுடன் தொடர்புடைய அமைப்பு தற்போது செய்தி வெளியிட்டு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இஸ்ரேல் தன்னை கொல்ல சதி செய்வதாக மசூத் பெஜஸ்கியான் ஏற்கனவே குற்றம்சாட்டி இருந்தது குறிப்பிடத்தக்கது.

### 14-07-2025



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம் :-** கல்வியில் வெற்றி கிடைக்கும். கௌரவம், மதிப்பு, மரியாதை கூடும். மனைவி, மக்களின் உடல் ஆரோக்கியம் மேம்படும். எல்லா வகையிலும் நன்மை, தனலாபம், பெண்களால் உதவி. ஆகியவையும் ஏற்படும்.

**ரிஷபம் :–** அனைத்துக் காரியங்களும் அனுகூலமாக நிலை உருவாகும். தன்னம்பிக்கை, தேகதிடம், வீரம், தைரியம் எல்லாம் ஓங்கும். பிறருக்குக் கட்டளை இடும் படியான அதிகாரமுள்ள பதவிகள் கிடைக்கும்.

**மிதுனம் :–** தெய்வீக காரியங்கள் ஈடேறும். எளிதில் வெற்றி கிடைக்கும். சுகம், சந்தோஷம், உல்லாசமான சுற்றுலாப் பயணங்கள் ஆகியவை ஏற்படும். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**கடகம் :–** பண இழப்பை தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். எதிர்பாராத வகையில் செலவுகள், மற்றும் தேவையற்ற அவமானங்கள் ஏற்படும். வியாபாரிகளுக்கு தொழிலில் வெற்றி கிட்டும்.

**சிம்மம் :–** இன்பச் சுற்றுலா, குறுகிய தூரப் பயணங்கள், நல்ல வருமானம், மனமகிழ்ச்சி ஆகியவை ஏற்படும். படுக்கை அறை சுகங்கள் மற்றும் நல்ல, ருசியான உணவு வகைகள் ஆகியவையும் கிடைக்கும்.

**கன்னி :–** எல்லா வளமும் பெறும் இனிய நாள். உல்லாசப் பயணங்கள் மூலம் உள்ளம் மகிழும். புதுப்பெண்கள் சிநேகமும், தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் குதுகலமாய் நிறைவேறும். எதிரிகள் பணிவர்.

**துலாம் :–** கௌரவக் குறைவு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வது சிறப்பு. மனைவி, மக்களின் உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. துன்பம் வந்தாலும் சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

**விருச்சிகம் :–** அன்னையின் ஆரோக்கியத்தில் சிறப்பு கவனம் தேவை. தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சி திருவினையாக்கும் என முயற்சியைக் கைவிடாது, முன்னேற முயலுங்கள். வெற்றி உங்கள் பக்கம்.

**தனுசு :–** அன்பு சகோதரர்களால் அதிக உதவி உண்டு. எடுத்த காரியங்கள் யாவற்றிலும் எளிதில் வெற்றி கிடைக்கும். முகநூல் மூலம் புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள்.

**மகரம் :–** சமாளிக்க முடியாத செலவுகள் ஏற்படும். கருத்து வேறுபாடு ஏற்படாதிருக்க நண்பர்களுடன் சுமுகமாக இருத்தல் அவசியம். வண்டி, வாகனங்களில் செல்கையில் வேகத்தை குறைத்து விவேகமாக நடக்கவும்.

**கும்பம் :–** குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். புத்தாடை அணிகலன்கள் ஆகியவற்றை அணிவார். பெரியோர் பால் நேசம் ஏற்படும்.தொழில் வளம் பெருகும். எதையும் துணிச்சலுடன் எதிர் கொள்வீர்கள்.


**மீனம் :–** வாயை அடக்கி வம்புக்கு செல்லாதிருப்பது சுகம். பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். புதிய பொருட்களை தேவைப்பட்டால் மட்டும் வாங்கவும். மாற்றங்கள் நிகழும். குறிக்கோளின்றி மனம் போன போக்கில் அலைய நேரும்.

# சுபான்ஷு சுக்லா இன்று பூமிக்கு திரும்புகிறார்..!

**புதுடெல்லி, ஜூலை 14-** சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து இன்று பூமிக்கு திரும்புகிறார் சுபான்ஷு சுக்லா.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் 73-வது விண்வெளி குழுவில் இடம் பெற்றுள்ள ஆன் மெக்லைன், டகுயா ஒனிஷி, அலெக்ஸி ஜூப்ரிட்ஸ்கி, கிரில் பெஸ்கோவ், செர்ஜி ரைஷிகோவ், ஜானி கிம் மற்றும் நிக்கோல் அயர்ஸ் ஆகிய 7 விண்வெளி வீரர்கள் ஆய்வு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுடன் கடந்த மாதம் 25-ந்தேதி சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு 14 நாட்கள் பயணமாக சென்ற, இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா மற்றும் பெக்கி விட்சன், திபோர் கபு மற்றும் ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி-விஸ்னீவ்ஸ்கி ஆகிய 4 பேரும் சேர்ந்து விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.



இந்த நிலையில் இவர்கள் ஆராய்ச்சியை முடித்து கொண்டு இன்று (திங்கட்கிழமை) சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலத்தின் கதவுகள் இந்திய நேரப்படி பகல் 2 மணிக்கு திறக்கப்படுகிறது. தொடர்ந்து, பகல் 2.25 மணிக்கு சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட 4 பேரும் விண்கலத்திற்குள் நுழைய உள்ளனர்.

தொடர்ந்து மாலை 4.15 மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து விண்கலம் தனியாக பிரிக்கப்படும். பின்னர் மாலை 4.35 மணிக்கு விண்கலம் பூமியை நோக்கி தன்னுடைய பயணத்தை தொடங்கும். சுமார் 24 மணி நேர பயணத்திற்கு பிறகு வருகிற 15-ந்தேதி பகல் சுமார் 3 மணி அளவில் பூமியை வந்தடைகின்றனர்.

குறிப்பாக, வடஅமெரிக்காவின் மேற்கு கடற்கரையில் பசிபிக் பெருங்கடலை ஒட்டி உள்ள கலிபோர்னியாவின் நீண்ட கடற்கரையில் விண்கலம் பத்திரமாக தரையிறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக அமெரிக்கா கடற்படையும் தயார் நிலையில் உள்ளது.

# மத்திய அமைச்சருக்கு கொலை மிரட்டல்

**பாட்னா, ஜூலை 14-** மத்திய மந்திரி சிராக் பஸ்வானுக்கு சமூக வலைதளம் மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

பீகார் மாநில சட்டசபைத் தேர்தல் இந்த ஆண்டு இறுதியில் நடைபெற உள்ளது. கடந்த வாரம் சரண் பகுதியில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய மத்திய மந்திரியும், லோக் ஜன்சக்தி (ராம் விலாஸ்) கட்சி தலைவருமான சிராக் பஸ்வான், 'வரவிருக்கும் சட்டசபைத் தேர்தலில் போட்டியிடப் போகிறேன். பீகாரின் வளர்ச்சிக்காக தேர்தலில் போட்டியிடுவேன்' என தெரிவித்தார்.



லோக் ஜனசக்தி கட்சி பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் முக்கிய அங்கம் வகிக்கிறது என்பதால், சிராக் பஸ்வானின் இந்த அறிவிப்பு பீகாரில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், மத்திய மந்திரி சிராக் பஸ்வானுக்கு சமூக வலைதளம் மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இன்ஸ்டாகிராம் பயனர் ஒருவர், சிராக் பஸ்வானுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் ராஜேஷ் பட் பாட்னா சைபர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இந்தப் புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து கொலை மிரட்டல் விடுத்த நபரை தேடி வருகின்றனர்.

# ஊ ழல் குற்றச்சாட்டு: ஷேக் ஹசீனா மகளை விடுப்பில் அனுப்பிய உலக சுகாதார நிறுவனம்

**புதுடில்லி, ஜூலை 14-** வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் மகள் சைமா வாஸெட்டை உலக சுகாதார நிறுவனம் (டபிள்யூ.எச்.ஓ.,) காலவரையற்ற விடுப்பில் செல்லுமாறு கேட்டுக் கொண்டது. அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்ட நிலையில், உலக சுகாதார நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் மகள் சைமா வாஸெட். இவர் உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசியாவின் பிராந்திய இயக்குநராக பணிபுரிந்து வந்தார். இவர் நடத்தும் ஒரு அறக்கட்டளைக்கு பணம் வசூலிக்க அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியது தொடர்பாக வங்கதேச ஊழல் தடுப்பு ஆணையம் வழக்குப் பதிவு செய்து உள்ளது.

தற்போது, ஷேக் ஹசீனாவின் மகள் சைமா வாஸெட்டை உலக சுகாதார நிறுவனம் (டபிள்யூ.எச்.ஓ.,) காலவரையற்ற விடுப்பில் செல்லுமாறு கேட்டுக் கொண்டு உள்ளது. உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் வாஸெட் விடுப்பில் இருப்பார் என்று ஊழியர்களுக்குத் தெரிவிக்கும் மின்னஞ்சலை அனுப்பி உள்ளார்.

அவருக்குப் பதிலாக உலக சுகாதார நிறுவனம் உதவி இயக்குநர் ஜெனரல் கேத்தரினா போஹ்மே நியமிக்கப்படுவார்.

இந்த தகவலை உலக சுகாதார நிறுவனம் உறுதிப்படுத்தி உள்ளது.

# மாணவர்கள் போராட்டம்:

# ட்ரம்ப் மிரட்டலுக்கு அடிபணிந்த கொலம்பியா பல்கலைக்கழகம்..!

**நியூயார்க், ஜூலை 14-** பாலஸ்தீனத்தின் காசா முனை மீதான இஸ்ரேலின் போர் தாக்குதலை கண்டித்து அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் போராட் டத்தில் ஈடுபட்டனர். குறிப்பாக கொலம்பியா பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் போராட்டம் தீவிரமாக நடந்தது.

பல்கலைக்கழக வளாகத்தில் கூடாரங்கள் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து போராட்டங்களை கட்டுப்படுத்தி நடவடிக்கை எடுக்க கொலம்பியா பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு அதிபர் ட்ரம்ப் நிர்வாகம் உத்தரவிட்டது. மேலும் யூத மாணவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க தவறியது, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளில் கொலம்பிய பல்கலைக்கழகம் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

இதனால் அந்தப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக்காக அரசு நிர்வாகத்தால் வழங்கப்படும் ரூ.3,400 கோடியை நிறுத்த ட்ரம்ப் உத்தரவிட்டார். இதனால் கொலம்பியா பல்கலைக்கழகம், ட்ரம்ப் நிர்வாகத்தின் சில உத்தரவுகளை ஏற்றது. அதன்படி பல்கலைக்கழக வளாக போலீசாருக்கு மாணவர்களை கைது செய்ய அதிகாரம் வழங்கப் பட்டது.

இந்த நிலையில் ஆராய்ச்சி நிதியை திரும்ப பெற ட்ரம்ப்புடன் பேச்சுவார்த்தை நடத்த கொலம்பியா பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்துள்ளது. மேலும், மனித உரிமை மீறல்களுக்கு இழப்பீடாக ட்ரம்ப் அரசுக்கு ரூ.1,700 கோடியை செலுத்த பல்கலைக் கழகம் தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ட்ரம்ப் நிர்வாகத்திற்கும் கொலம்பியா பல்கலைக்கழகத்திற்கும் இடையே பேச்சு வார்த்தை நடந்துள்ளது. அடுத்த வாரம் அதிபர் ட்ரம்ப்பை சந்தித்து இந்த ஒப்பந்தத்தை இறுதி செய்ய முடிவு செய்து இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதன்மூலம் ட்ரம்பின் மிரட்டலுக்கு கொலம்பியா பல்கலைக்கழகம் அடிபணிந்து உள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### சரக்கு ரெயிலில் தீ விபத்து:
# உயர்மட்ட விசாரணைக்கு இ.பி.எஸ். வலியுறுத்தல்

**சென்னை, ஜூலை 14-**
சரக்கு ரெயிலில் ஏற்பட்ட தீ விபத்து: உயர்மட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும் என எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.



சென்னை, மணலி ஐ.ஓ.சி.எல்-இல் இருந்து, சரக்கு ரயில் ஒன்று, 52 டேங்கர்களில் கச்சா எண்ணெய் ஏற்றிக்கொண்டு நேற்று (ஜூலை 13) அதிகாலை மைசூர் நோக்கி சென்று கொண்டிருந்தது. அந்த ரயில், திருவள்ளூர் ரயில் நிலையத்தை கடந்து சென்ற போது, எதிர்பாராத விதமாக ரயில் என்ஜின் தடம் புரண்டது. இதனால், சுமார் 70 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கச்சா எண்ணெய் டேங்கர்களில் உரசல் ஏற்பட்டு ஒரு டேங்கரில் தீப்பற்றியது. அந்த தீ மளமளவென அடுத்தடுத்த 6 டேங்கர்களுக்கும் பரவி, கொழுந்து விட்டு எரிந்தது.

இதுகுறித்து, தகவலறிந்து, திருவள்ளூர், திரூர், கும்மிடிப்பூண்டி சிப்காட் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து தீயணைப்பு நிலைய வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து, ரசாயனம் கலந்த நீரை பீய்ச்சி அடித்து தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். இந்த நிலையில், இந்த விபத்து குறித்து, அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருவள்ளூர் அருகே பெரியகுப்பம், வரதராஜன் நகர் பகுதியில் டேங்கர் ரெயிலில் டீசல் டேங்க் வெடித்து, தீ பரவியதில் 50க்கும் மேற்பட்ட வீடுகள் புகை மூட்டத்தில் மூழ்கியுள்ளன. 10க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் போராடியும் தீ கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என செய்திகள் வருகின்றன.

உடனடியாக மத்திய, மாநில பேரிடர் மீட்புப் படைகளை ஒருங்கிணைத்து, பாதிக்கப்பட்ட மக்களை முழுமையாக, பாதுகாப்புடன் வெளியேற்ற வேண்டும் எனவும், அவர்களுக்கான தற்காலிக தங்குமிடங்கள் மற்றும் அவசர மருத்துவ வசதிகளை ஏற்பாடு செய்திடவும் தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன். விபத்து ஏற்பட்டதற்கான காரணம் குறித்து உயர்நிலை விசாரணை நடத்த வேண்டும் என ரெயில்வே நிர்வாகத்தை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாராளுமன்ற கூட்டத்தொடர்:
# காங்., எம்.பி.க்களுடன் சோனியா ஆலோசனை

**புதுடில்லி, ஜூலை 14-**
பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் தொடர்பாக ஆலோசிக்க காங்கிரஸ் எம்.பி.க்கள் கூட்டம் வருகிற 15-ந்தேதி நடக்கிறது.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் வருகிற 21ம் தேதி முதல் ஆகஸ்ட் 21ம் தேதி வரை நடைபெறுகிறது. சுமார் ஒரு மாதம் நடைபெறும் இந்த நீண்ட கூட்டத்தொடரில் பல முக்கிய மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கைக்கு பிறகு முதல்முறையாக பாராளுமன்றம் கூடுவதால் அதுகுறித்த நடவடிக்கை பற்றியும், இந்தியா-பாகிஸ்தான் போர்நிறுத்தத்தில் டிரம்ப்பின் தலையீடு குறித்தும் விவாதம் நடைபெறும் என்று தெரிகிறது. கூட்டத்தொடர் தொடர்பான அனைத்துக் கட்சி கூட்டம் வருகிற 19-ந் தேதி நடக்கிறது.

இந்த நிலையில் பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் தொடங்க உள்ள நிலையில் அதுகுறித்து ஆலோசிக்க காங்கிரஸ் எம்.பி.க்கள் கூட்டம் வருகிற 15-ந்தேதி (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது. காங்கிரஸ் பாராளுமன்ற குழு தலைவர் சோனியா காந்தி தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லி கார்ஜூன கார்கே, ராகுல் காந்தி உள்ளிட்டோர் கலந்து கொள்கிறார்கள். டெல்லி ஜன்பத் சாலையில் உள்ள சோனியா இல்லத்தில் இந்த கூட்டம் நடைபெறும் என்று தெரிகிறது.

பீகாரில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம், பகல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் பாராளுமன்றத்தில் எப்படி செயல்படுவது என்பது குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நியமன எம்.பி. உஜ்வால் நிகாமுக்கு பிரதமர் நரேந்திரமோடி வாழ்த்து

**புதுடெல்லி, ஜூலை 14-**
மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள உஜ்வால் நிகாமின் பணி பாராட்டத்தக்கது என பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்தி உள்ளார் .



மாநிலங்களவையில் நேரடியாக 12 உறுப்பினர்களை குடியரசுத் தலைவர் நேரடியாக நியமிக்கலாம். அப்படி நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிந்த நிலையில் புதிதாக நான்கு பேரை உறுப்பினர்களாக குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தற்போது நியமித்துள்ளார்.

கலை, அறிவியல், சட்டம், விளையாட்டு, இலக்கியம், சமூக சேவையில் சிறந்து விளங்குபவர்களை அடையாளம் கண்டு குடியரசுத் தலைவர் நேரடியாக அவர்களை மாநிலங்களவை உறுப்பினர்களாக நியமிப்பார். அந்த வகையில் இப்போது சட்டத்துறையில் சிறப்பான செயல்பாட்டை வழங்கிய உஜ்வால் நிகாமை நியமன மாநிலங்களவை உறுப்பினராக நியமித்துள்ளார். இந்நிலையில், அவருக்கு பிரதமர் மோடி தனது வாழ்த்தினை தெரிவித்துள்ளார்.

"சட்டத்துறை மற்றும் அரசமைப்பு மீதான உஜ்வால் நிகாமின் அர்ப்பணிப்பும், பற்றும் போற்றத்தக்கது. அவர் வழக்கறிஞராக மட்டுமல்லாமல் முக்கிய வழக்குகளில் நீதி கிடைப்பதில் பிரதான பங்காற்றியுள்ளார். வழக்கறிஞராக அரசியலமைப்பை வலுப்படுத்தும் வகையிலும், மக்கள் கண்ணியத்துடன் நடத்தப்படுவதை உறுதி செய்யவும் பாடுபட்டுள்ளார். மாநிலங்களவை உறுப்பினராக குடியரசுத் தலைவர் அவரை நியமித்து இருப்பது மகிழ்ச்சி தருகிறது. அவரது நாடாளுமன்ற இன்னிங்ஸிற்கு எனது வாழ்த்துகள்" என எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி ட்வீட் செய்துள்ளார்.

### 'சாமி' பட வில்லன் கோட்டா
# சீனிவாச ராவ் காலமானார்: பிரதமர் மோடி இரங்கல்

**ஐதராபாத், ஜூலை 14-**
நடிகர் கோட்டா சீனிவாச ராவ் (83) உடல் நலக்குறைவால் காலமானார். சில மாதங்களாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை உயிர் பிரிந்தது.



கோட்டா சீனிவாச ராவ் தெலுங்கு, தமிழ் உள்ளிட்ட மொழிகளில் 750-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். தமிழில் சாமி, திருப்பாச்சி, சகுனி உள்ளிட்ட படங்களில் கோட்டா சீனிவாசராவ் நடித்துள்ளார். 2015இல் மத்திய அரசின் பத்மஸ்ரீ விருது உள்பட பல்வேறு விருதுகளை கோட்டா சீனிவாசராவ் வென்றுள்ளார். 1999- 2004 வரை விஜயவாடா கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக கோட்டா சீனிவாசராவ் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், நடிகர் கோட்டா சீனிவாச ராவ் மறைவுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் தள பக்கத்தில், கோட்டா ஸ்ரீனிவாச ராவ் மறைவு வருத்தமளிக்கிறது. அவரது சினிமா திறமை மற்றும் பல்துறைத் திறனுக்காக அவர் நினைவு கூரப்படுவார். தனது அற்புதமான நடிப்பால் பல தலைமுறைகளாக பார்வையாளர்களை கவர்ந்தவர். சமூக சேவையிலும் முன்னணியில் இருந்த அவர், ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு அதிகாரம் அளிக்க பாடுபட்டார்.

அவரது குடும்பத்தினருக்கும் எண்ணற்ற ரசிகர்களுக்கும் எனது இரங்கல்கள்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். கோட்டா சீனிவாச ராவ் உடலுக்கு பல தெலுங்கு நடிகர்களும் அரசியல் தலைவர்களும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அந்த வகையில் ஆந்திரா துணை முதலமைச்சரான பவன் கல்யாண், நடிகர் பிரம்மானந்தம் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். நடிகர் சத்யராஜ் அவரது இரங்கலை விடியோவாக அவரது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

### மீண்டும் அதிர்ச்சி சம்பவம்:
# பீகாரில் ஒரே வாரத்தில் 2-வது பா.ஜ., தலைவர் சுட்டுக்கொலை

**பாட்னா, ஜூலை 14-**
பீகார் தலைநகர் பாட்னாவில் பா.ஜ., தலைவர் சுரேந்திர கேவத் (52) மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த ஒரு வாரத்தில் 2வது பா.ஜ., தலைவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் இதுவாகும்.



பீகாரில், கடந்த ஜூலை 6ம் தேதி, தலைநகர் பாட்னாவில் காந்தி மைதான் போலீஸ் ஸ்டேஷன் எல்லைக்கு உட்பட்ட, 'ட்வின் டவர்' பகுதியில், பிரபல தொழிலதிபரும், பா.ஜ., பிரமுகருமான கோபால் கெம்கா, வீட்டு வாசலில் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்நிலையில், தற்போது பாட்னாவில் பா. ஜ. தலைவர் சுரேந்திர கேவத் (52) சுட்டுக் கொல்லப்பட்டு உள்ளார். பைக்கில் வந்த இருவர், 4 முறை சுட்டதில் படுகாயமடைந்த கேவத், பாட்னா எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

பிரேத பரிசோதனை நடைபெற்று வருகிறது. குடும்பத்தினரிடமிருந்து புகார் கிடைத்த பிறகு எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்படும். விசாரணை தொடங்கப்பட்டுள்ளது என்று போலீசார் தெரிவித்தனர். கடந்த ஒரு வாரத்தில் இரண்டு பா.ஜ., தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஜூலை 6ம் தேதி பா.ஜ., தலைவர் கோபால் கெம்கா என்பவரும் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

# உத்திரமேரூர் பேரூராட்சியை கண்டித்து ஜூலை 17-ல் அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்
## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, ஜூலை 14-**
உத்திரமேரூர் பேரூராட்சியை கண்டித்து அ.தி.மு.க. சார்பில் வரும் ஜூலை 17-ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இது தொடர்பாக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் பேரூராட்சியில் சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படாததால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உத்திரமேரூர் அரசு பொது மருத்துவமனையில் நிலவும் சுகாதார சீர்கேடுகளால், சிகிச்சை பெறும் உள் நோயாளிகள் மற்றும் சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் மிகுந்த அவதியுறுகின்றனர். .

உத்திரமேரூரில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் சரியான முறையில் செயல்படாததால், விவசாயிகள் கொண்டுவரும் நெல் மூட்டைகளைக் கொள்முதல் செய்வதில் தாமதம் மற்றும் நெல்லுக்கான தொகையும் காலதாமதமாக வழங்கப்படுகின்றன.

உத்திரமேரூர் பகுதி வாழ் மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றாமல் வேடிக்கை பார்த்து வரும் தி.மு.க. அரசுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிலையில், உத்திரமேரூர் பேரூராட்சி மற்றும் தி.மு.க. அரசை கண்டித்து காஞ்சிபுரம் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் ஜூலை 17-ம் தேதி காலை 10 மணிக்கு, உத்திரமேரூர் பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கட்சியின் இலக்கிய அணிச் செயலாளர் வைகைச்செல்வன் தலைமையிலும்; காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் ஏ.சோமசுந்தரம் முன்னிலையிலும் நடைபெறும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# புதுச்சேரி: புதிய அமைச்சராக ஜான்குமார் இன்று பதவியேற்பு

**புதுச்சேரி, ஜூலை 14-**
புதுச்சேரியில் புதிய அமைச்சராக பா.ஜ.க.வின் ஜான்குமார் இன்று பதவி யேற்கிறார்.



புதுச்சேரி பா.ஜ.க.வில் கோஷ்டிபூசல் நிலவியது. 6 எம்.எல்.ஏ.க்களில் இருவருக்கு அமைச்சர் பதவியும், சட்டப்பேரவைத் தலைவர் பதவியும் தரப்பட்டது.

எஞ்சிய பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்களும் பதவி கோரி வந்தனர். மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. தோல்விக்கு பிறகு வரும் சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ள பா.ஜ.க. அதிரடி முடிவு எடுத்தது.

புதுவையில் கூட்டணி அமைச்சரவையில் அங்கம் வகித்த பா.ஜ.க. அமைச்சர் சாய் ஜெ. சரவணன் குமார், அக்கட்சியின் சார்பில் நியமிக்கப்பட்ட நியமன எம்.எல்.ஏ.க்கள் ராமலிங்கம், வெங்கடேசன், அசோக்பாபு ஆகியோர் கட்சி தலைமையின் அறிவுறுத்தலின் பேரில் தங்கள் தங்கள் பதவிகளைத் துறந்தனர்.

அதைத்தொடர்ந்து பா.ஜ.க. மாநிலத்தலைவராக ராமலிங்கம் போட்டியின்றி தேர்வாகி பதவியேற்றார்.

பா.ஜ.க. மூத்த நிர்வாகி செல்வம், முன்னாள் எம்.எல்.ஏ. தீப்பாய்ந்தான், ஜிஎன் எஸ் ராஜசேகரன் ஆகியோர் நியமன எம்.எல்.ஏ. பதவிக்கும், ஜான்குமார் அமைச்சர் பதவிக்கும் தேர்வு செய்யப்பட்டனர்.

துணைநிலை ஆளுநர் மூலமாக மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு இவர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டது. இரண்டு வாரங்களுக்கு பிறகு அனுமதி கிடைத்ததையடுத்து இன்று பதவியேற்பு விழா நடக்கிறது. பகல் 12.30 மணிக்கு சட்டப்பேரவை வளாகத்தில் பேரவைத்தலைவர் செல்வம், மூன்று நியமன எம்.எல்.ஏ.க்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார். அமைச்சராக பா.ஜ.க. ஜான்குமார் ராஜ்நிவாஸில் இன்று மதியம் 1.30 மணிக்கு நடக்கிறது. துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார். இந்நிலையில் அமைச்சர் ஜான்குமார் தனது எம்.எல்.ஏ. அலுவலகத்தில் இன்று மதியம் ஆயிரம் பேருக்கு மட்டன் பிரியாணி அன்னதானம் வழங்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டு கல்வி மோகத்தில் கடனில் மூழ்க வேண்டாம்
## தலைமை நீதிபதி கவாய் அறிவுரை

**ஐதராபாத், ஜூலை 14-**
வெளிநாட்டு கல்வி, பட்டங்கள் மோகத்தில் கடனில் மூழ்க வேண்டாம் என தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் அறிவுரை வழங்கியுள்ளார்.

தெலுங்கானா ஐதராபாத்தில் உள்ள சட்டப் பல்கலைக்கழகத்தின் 22வது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் கலந்து கொண்டார்.

முதலமைச்சர் ரேவந்த் ரெட்டியும் இந்த நிகழ்வில் பங்கேற்றார்.

நீதிபதி கவாய் தனது உரையில், இளம் வழக்கறிஞர்கள் மற்றும் சட்டத் தொழிலில் நுழையும் மாணவர்களுக்கு முக்கிய அறிவுரைகளை வழங்கினார். சட்ட மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் வெளிநாட்டு பட்டங்களுக்காக கடனில் மூழ்க வேண்டாம் என்று எச்சரித்தார்.

இந்தியா தரமான சட்டக் கல்வியை வழங்குகிறது, வெளிநாட்டு பட்டங்கள் திறமையை அதிகரிக்கின்றன என்பது ஒரு கட்டுக்கதை என்றும், ஒருவரின் திறமை அவர்களின் பணி மூலம் நிரூபிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். எனவே வெளிநாட்டு பட்டங்களுக்காக குடும்பங்களுக்கு கடன் சுமையை ஏற்படுத்த வேண்டாம் என்று அவர் மாணவர்களை அறிவுறுத்தினார்.

மேலும் தற்காலத்தில் நீதித்துறை எதிர்கொள்ளும் சவால்களையும் கவாய் எடுத்துரைத்தார்.

இந்தியா பல்வேறு சட்ட சவால்களை எதிர்கொள்கிறது என்றும், வழக்கறிஞர்கள் மற்றும் சட்டத் தொழிலில் உள்ளவர்கள் அனைவரும் கவனமாக இருப்பது முக்கியம் என்றும் கூறினார்.

### அஜித் மரணத்துக்கு நீதி கேட்டு சென்னையில்
# த.வெ.க. ஆர்ப்பாட்டம்: விஜய் பங்கேற்பு

**சென்னை, ஜூலை 14-**
திருப்புவனம் காவலாளி மரணத்துக்கு நீதி கேட்டு சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்றார்



தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தலைமையில் திருப்புவனம் காவல் நிலைய லாக்அப் மரணத்தை கண்டித்தும், கொலைக்கு நீதி வேண்டியும் நேற்று சென்னையில் அவர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், கடந்த 4 ஆண்டுகளில் லாக்அப் மரணங்களில் தங்கள் உறவுகளை இழந்தவர்களின் குடும்பத்தினரும் மேடையேற்றப்பட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டாத்தில் விஜய் பேசியது: "திருப்புவனம் மடப்புரம் அஜித்குமார் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். அந்தக் குடும்பத்துக்கு நடந்த கொடுமைக்கு முதல்வர் ஸ்டாலின் சாரி சொன்னார். நல்ல விஷயம் தான். ஆனால், உங்களின் ஆட்சியில் 24 பேர் காவல் நிலையங்களில் இறந்திருக்கின்றனர். அவர்களிடமும் சாரி சொல்லுங்கள். அவர்களுக்கும் நிதியுதவி வழங்குங்கள். சாத்தான்குளம் ஜெயராஜ், பென்னிக்ஸ் வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றியபோது விமர்சித்தீர்களே. இப்போது ஏன் இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றினீர்கள். இப்போதும் சி.பி.ஐ. ஆர்.எஸ்.எஸ். - பாஜகவின் கைப்பாவையாகத் தானே இருக்கிறது? நாங்கள் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணை கேட்டதால், பயந்து போய் சி.பி.ஐ.க்கு மாற்றியிருக்கிறீர்கள். ஏன் ஒன்றிய அரசின் பின்னால் ஒளிந்து கொள்கிறீர்கள்?

அண்ணா பல்கலை. மாணவி வழக்கு முதல் அஜித்குமார் வழக்கு வரை எல்லாவற்றுக்கும் நீதிமன்றம் தலையிட்டு கேள்வி கேட்கிறது. நீதிமன்றம்தான் கேள்வி கேட்க வேண்டும் என்றால், நீங்க எதுக்கு சார்? உங்க ஆட்சி எதுக்கு சார்? முதல்வர் பதவி எதுக்குங்க சார்? அதிகபட்சம் உங்க கிட்ட வர்ற பதில், 'சாரி மா, நடக்கக் கூடாதது நடந்துடுச்சு மா' என்பதுதானே.. இந்த வெற்று விளம்பர மாடல் தி.மு.க. சர்க்கார், இப்போ சாரி மா மாடல் சர்க்காரா மாறிடுச்சு.

நீங்க செய்த எல்லா தவறுகளுக்கும் பரிகாரமா சட்டம் - ஒழுங்கை நீங்களே சரி செஞ்சாகணும். இல்லன்னா, மக்களோடு மக்களா நின்று உங்களை சரி செய்ய வைப்போம். தவெக சார்பில் அதற்கு உண்டான போராட்டங்கள் நடத்தப்படும்" என்று காட்டமாக பேசினார் விஜய்.

### அதிகரிக்கும் வெயிலின் தாக்கம்:
# கொடைக்கானலில் அதிகரித்த சுற்றுலாப்பயணிகள் வருகை..!

**திண்டுக்கல், ஜூலை 14-**
தமிழகத்தின் பல்வேறு இடங்களில் வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் வார விடுமுறை தினத்தில் கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலுக்கு கோடை காலம் மட்டுமின்றி வார விடுமுறை தினங்களிலும் சுற்றுலாப் பயணிகள் வரத்து அதிகரித்து காணப்படுகிறது. இதற்கு தமிழகத்தின் பல்வேறு இடங்களில் வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவது தான் காரணம். இந்நிலையில் வார விடுமுறை தினங்களாக சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்கள் கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து காணப்படுகிறது. இ-பாஸ் முறையால் சிரமம் என்ற நிலை மாறி, தற்போது எளிதாக இ பாஸ் எடுத்து சுற்றுலாப் பயணிகள் வாகனங்களில் கொடைக்கானலுக்கு வந்து செல்கின்றனர். கடந்த இரு தினங்களாக கொடைக்கானலில் உள்ள சுற்றுலாத் தலங்களான குணா குகை, பைன் பாரஸ்ட், தூண் பாறை, மோயர் பாய்ண்ட், பசுமைப் பள்ளத்தாக்கு, ரோஸ் கார்டன், பிரையண்ட் பூங்கா பகுதிகளில் சுற்றுலாப் பயணிகள் அதிகம் காணப்பட்டனர்.

நேற்று கொடைக்கானலில் பகலில் மிதமான வெப்பத்துடன் கூடிய இதமான குளிர்ந்த காலநிலை கொடைக்கானலில் நிலவியதை இயற்கை எழிலுடன் சேர்ந்து சுற்றுலாப் பயணிகள் உணர்ந்தனர்.

# பீகார் வாக்காளர் பட்டியலில் ஏராளமான வெளிநாட்டினர்: தேர்தல் கமிஷன்

**புதுடில்லி, ஜூலை 14-**
பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் திருத்த பணியின் போது தேர்தல் கமிஷன் அதிகாரிகள் வீடு வீடாக மேற்கொண்ட கள ஆய்வில், வங்கதேசம், நேபாளம், மியான்மரை சேர்ந்த மக்கள் அதிக அளவில் வசித்து வருவது அடையாளம் காணப்பட்டு உள்ளது.

பீகாரில், முதல்வர் நிதிஷ் குமார் தலைமையில் ஐக்கிய ஜனதா தளம், பா.ஜ., கூட்டணி ஆட்சி நடக்கிறது.

இம்மாநில சட்டசபைக்கு இந்தாண்டு இறுதியில் தேர்தல் நடக்கவுள்ளது.

இதையடுத்து, வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகளை தலைமை தேர்தல் கமிஷன் மேற்கொண்டு வருகிறது.

இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதன் விசாரணை நீதிபதிகள் சுதான்ஷு துலியா, ஜோய்மாலியா பக்ஷி அமர்வு விசாரணைக்கு வந்தது.

தலைமை தேர்தல் கமிஷன் நடத்தி வரும் வாக்காளர் தீவிர திருத்தப் பணிகளுக்கு தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு தெரிவித்தது.


இந்த சரிபார்ப்பு பணியின்போது ஆதார்,

வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ரேஷன் அட்டைகளையும் உரிய ஆவணமாக கருத்தில் கொள்ளும்படி தேர்தல் கமிஷனுக்கு பரிந்துரைத்தது.

இந்நிலையில், வாக்காளர் திருத்த பட்டியலை தயார் செய்யும் பணியில் தேர்தல் கமிஷன் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்த விசாரணை உரிய முறையில் ஆகஸ்ட் 1ம் தேதிக்குள் நடத்தப்படும். வரும் செப்டம்பர் 30ம் தேதி இறுதி வாக்காளர் திருத்தப் பட்டியல் வெளியிடப்படும். சட்டவிரோத குடியேறிகளின் பெயர்கள் சேர்க்கப்படாது என தேர்தல் கமிஷன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....




தி.மு.க., கூட்டணியில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். வரும் 2026 தேர்தலில், தி.மு.க., அறுதி பெரும்பான்மை பெறும்; கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போகும். கூட்டணி அரசு வேண்டும் என்று நான் விரும்பவில்லை. தமிழக மக்களும் கூட்டணி ஆட்சியை ஏற்க மாட்டார்கள்.

- வைகோ




அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி பொருந்தா கூட்டணி. வெளியே நிற்கும் சில கட்சிகளை உள்ளே இழுப்பதற்காக, அமித்ஷா கூட்டணி ஆட்சி, கூட்டணி ஆட்சி என்று ஆசை காட்டுகிறார். அ.தி.மு.க, தமிழகத்தில் ஒரு வலுவான கட்சி. ஆண்ட கட்சி. ஆனால் அந்த கட்சியின் விருப்பத்திற்கு மாறாக அமித்ஷாதன் விருப்பம்போல் கருத்துக்களை சொல்லி வருகிறார்.

- திருமாவளவன்



மரத்தடியிலும் மைதானங்களிலும் கல்வியை சொல்லிக் கொடுக்கும் நிலைமை தமிழ்நாட்டில் தொடர்கிறது. மாணவர்களை வகுப்பறையில் "ப" வடிவில் அமர வைக்கும் பொழுது மருத்துவ ரீதியாக அவர்களுக்கு ஏற்படும் உடல் நல பாதிப்புகளை மருத்துவத்துறை நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்.

- தமிழிசை



அரிதிலும் அரிதாக நடத்தப்படும் ஆசிரியர் பணிக்கான தேர்வுகளில் பங்கேற்க புதிய பி.எட் பட்டதாரிகள் அனுமதிக்கப்பட வேண்டும். அதற்கு வசதியாக அடுத்த இரு வாரங்களில் புதிய பி.எட் பட்டதாரிகளுக்கு தற்காலிகப் பட்டச்சான்றிழும், ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியலை தமிழக அரசு விரைந்து வழங்க வேண்டும்.

- அன்புமணி



தென்காசி தெற்கு மாவட்டம் கலைஞர் அறிவாலயத்தில்சுதந்திர போராட்ட வீரர் வீரன் அழகுமுத்துக்கோன் 268 வது குருபூஜை விழா தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் தலைமையில் அலங்கரிக்கப்பட்ட வீரன் அழகுமுத்துக்கோன் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம், இளம் பேச்சாளர்கள், மாநில, மாவட்ட ,ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தென்காசி கிழக்கு ஒன்றிய பகுதியில் பாகம் எண் 6 ,7 ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையினை தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே. ஜெயபாலன் ஆய்வு செய்து புதிய உறுப்பினர்களை சேர்த்தார். உடன் ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம், தலைமை செயற்குழு உறுப்பினர் சேசு ராஜன், ஒன்றிய துணை செயலாளர் ஆனந்தராஜ் ,குற்றாலம் காசி விஸ்வநாதர் கோயில் அறங்காவலர் சுந்தர்ராஜன், திருநாவுக்கரசு மற்றும் பாக முகவர்கள் பிடிஏ உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## சுரண்டை எஸ்.ஆர்.ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் துரித உணவை அகற்றுவோம் தின விழா



**சுரண்டை ஜூலை.14:**

சுரண்டை எஸ் ஆர் ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் பாலர் வகுப்பு குழந்தைகளுக்கு "துரித உணவை அகற்றுவோம் தினம் கொண்டாடப்பட்டது.

குழல்வாய்மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவனர் சிவ பபிஸ்ராம், பள்ளியின் செயலர் சிவ டிப்ஜினிஸ் ராம், முதல்வர் பொன் மனோன்யா,புஷ்பா மற்றும் தலைமை ஆசிரியர் மாரிக்கனி ஆகியோர் தலைமை வகித்தனர்.

இவ்விழாவில் மழலைகளுக்கு துரித உணவை பற்றிய விழிப்புணர்வை சத்துமிக்க பழங்கள் மற்றும் தானியவகைகள் பயன்படுத்தி ஆசிரியை தங்க புஷ்பா மற்றும் மகாலட்சுமி செயல்பாடுகள் மூலம் நடித்து காட்டி எடுத்துக் கூறினர்.

பழங்களை சுவைத்து மகிழ்ந்தனர். ஆசிரியை ரவின்சா மாணவர்களை ஒருங்கிணைத்தார்.

## தென்காசி தெற்கு மாவட்டம், ஆலங்குளம் மத்திய ஒன்றியம் சார்பில் முப்பெரும் விழா பொதுக்கூட்டம்



**தென்காசி ஜூலை.14:**

தென்காசி தெற்கு மாவட்டம், ஆலங்குளம் மத்திய ஒன்றியம் சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் 102 வது பிறந்த நாள் விழா, தமிழக முதல்வரின் நாடு போற்றும் நான்கு ஆண்டு சாதனை விழா, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை விழா ஆகிய முப்பெரும் விழா பொதுக்கூட்டம் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் சேக் முகமது வரவேற்புரை ஆற்றினார். திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் மதிவதினி,தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர்.ராணி ஸ்ரீகுமார், தென்காசி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டாக்டர். கலை கதிரவன், கழக இளம் பேச்சாளர்கள் ரேவதி பிருத்திவி ராணி மெசியா மற்றும் தலைமை கழக பேச்சாளர்கள் வேங்கை சந்திரசேகர், வாடியூர் மரியராஜ், வெல்டிங் மாரியப்பன் ஆகியோர் நான்கு ஆண்டு சாதனைகளை பொதுமக்களுக்கு எடுத்து கூறினார்

நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் கென்னடி, தலைமை செயற்குழு சேசு ராஜன், தலைமை பொதுக்குழு ரஹீம், ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன் ,வழக்கறிஞர் சிவகுமார், சீ.பொன் செல்வன் ஜே.கே. ரமேஷ், அழகு சுந்தரம், மணிகண்டன், ஜெயா, நகர செயலாளர் சாதிர் உட்பட பலர் கலந்து கொண்டனர்




காமராஜர் 122வது பிறந்தநாளை முன்னிட்டு கீழ்பாக்கம் சி.எஸ்.ஐ பள்ளியில் நடைபெற்ற வழக்கறிஞர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் திருவொற்றியூர் வழக்கறிஞர் சங்கத்தின் கேப்டன் அன்சர்பாஷா தலைமையிலான அணி முதல் பரிசை வென்றது. இந்த போட்டியில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டுக் குழு மாநிலத் துணைத் தலைவர் சுப்பிரமணி சிறப்புஅழைப்பாளராக கலந்து கொண்டார்.

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெறுவதையொட்டி விண்ணப்பங்கள் மற்றும் கையேடுகள் வழங்கும் பணி

## கலெக்டர் ஆர்.அழகுமீனா நேரில் ஆய்வு



**கன்னியாகுமரி.ஜூலை.14-**

கன்னியாகுமரி மாவட்ட கிள்ளியூர் வட்டத்துக்குட்பட்ட திப்பிறமலை, கண்ணன் விளை, விளவங்கோடு வட்டத்துக்குட்பட்ட திரித்துவபுரம் உள்ளிட்ட பகுதிகளில் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் மற்றும் மடிப்பேடுகளை தன்னார்வலர்கள் வீடு வீடாக சென்று பொதுமக்களுக்கு வழங்கி அவர்களிடையே, விளக்கிகூறுவதை கலெக்டர் ஆர்.அழகுமீனா, இன்று (13.07.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில் -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொதுமக்களின் நலன் கருதி, தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு, பல்வேறு திட்டங்களை அறிவித்து, மிகச்சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனைத்தொடர்ந்து தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து தரப்பட்ட பொதுமக்களின் குறைகளைத்தீர்க்க அவர்களின் பகுதிகளில் கலெக்டர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாவட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்டவர்கள் நேரில் சென்று முகாம்கள் நடத்தி பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற ஆக்கப்பூர்வமான புதிய திட்டத்தினை வரும் 15ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் துவக்கி வைக்கவுள்ளார்கள்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கூலித்தொழில், தூய்மை பணியாளர்கள், அமைப்புசாரா பணியாளர்கள், செங்கல் சூளை உள்ளிட்ட தொழில் செய்யும் ஏழை எளிய மக்களின் வசதிக்குகேற்ப அவர்களின் பகுதிகளுக்கு அருகாமையிலேயே தங்கள் குறைகளையும், கோரிக்கைகளையும், தேவைகளையும் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து வழங்குவதற்கு ஏற்ற வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் வழிவகை செய்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் வரும் 15.07.2025 அன்று நாகர்கோவில் மாநகராட்சி வார்டு 1, 2 பகுதிகளுக்கு ஆளூர் மாநகராட்சி சமூகநல கூடத்திலும், அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட கன்னியாகுமரி நகராட்சி வார்டு 1, 2 பகுதிகளுக்கு கன்னியாகுமரி நகராட்சி அலுவலக வளாகத்திலும், திருவட்டார் பேரூராட்சி பகுதிகளுக்கு திருவரம்பு குருவிக்காடு புனித அந்தோணியார் சமூக நல க் கூ ட த் தி லும், தோவாளை வட்டம் ஞாலம் ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு அந்தரபுரம் இ சேவை மையத்திலும், கிள்ளியூர் வட்டம் கிள்ளியூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு திப்பிறமலை ஸ்ரீ முத்தாரம்மன் கலையரங்கத்திலும், விளவங்கோடு வட்டம் விளவங்கோடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பாலவிளை புனித அந்தோணியார் சமூகநலக்கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெறவுள்ளது.

வரும் 16.07.2025 அன்று கல்குளம் வட்டம் பத்மநாபபுரம் நகராட்சிக்குட்பட்ட 1,2, 3ம் வார்டுகளுக்கு மேட்டுக்கடை லலித மஹால் திருமண மண்டபத்திலும், திருவட்டார் வட்டம் ஆற்றூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு ஆற்றூர் என்.வி.கே.எஸ்.டி பள்ளியிலும், விளவங்கோடு வட்டம் உண்ணாமலைக்கடை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு மாமூட்டுகடை பி.எஸ்.மஹாலிலும், அகஸ்தீஸ்வரம் வட்டம் அகஸ்தீஸ்வரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு இரவிபுதூர் அரசு மேல்நிலைப்பள்ளியிலும், தோவாளை வட்டம் தோவாளை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு காட்டுபுதூர் சுயஉதவிக்குழு கட்டிடத்திலும், கிள்ளியூர் வட்டம் முன்சிறை மற்றும் சூழால் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பாலவிளை புனித சேவியர் எம்.எஸ்.எஸ் ஆலய வளாக பழைய பள்ளி கட்டிடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெறவுள்ளது.

வரும் 17.07.2025 அன்று அகஸ்தீஸ்வரம் வட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட 7 மற்றும் 8 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு வாத்தியார் விளை சிவதாணு மண்டபத்திலும், விளவங்கோடு வட்டம் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 1 மற்றும் 2 வார்டுகளுக்கு திரித்துவபுரம் டிரினிட்டி கலையரங்கிலும், கிள்ளியூர் வட்டம் பாலப்பள்ளம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு தெற்கு நீர்வக்குழி செயின்ட ஜூட்ஸ் ஹைக்டெக் பள்ளியிலும், கல்குளம் வட்டம் குருந்தன்கோடு நெட்டாங்கோடு உட்பட்ட பகுதிகளுக்கு நெட்டாங்கோடு தேவி திருமண மண்டபத்திலும், திருவட்டார் வட்டம் அயக்கோடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு மண்விளை சி.எஸ்.ஐ சமுதாய நலக்கூடத்திலும், தோவாளை வட்டம் பீமநகரி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பீமநகரி வெம்பத்தூர் கூட்டுறவு மஹாலிலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெறவுள்ளது.

வரும் 18.07.2025 அன்று அகஸ்தீஸ்வரம் வட்டம் கன்னியாகுமரி நகராட்சிக்குட்பட்ட வார்டு 6,7 மற்றும் 8 உட்பட்ட பகுதிகளுக்கு கன்னியாகுமரி நகராட்சி வளாகத்திலும், விளவங்கோடு வட்டம் களியாக்காவிளை பேரூராட்சிக்குட்பட்ட களியக்காவிளை சி.எஸ்.ஐ கம்யூனிட்டி ஹாலிலும், தோவாளை வட்டம் அழகியபாண்டியபுரம் பேரூராட்சிக்குட்பட்ட எட்டாமடை ஆர்.சி.மண்டபத்திலும், கல்குளம் வட்டம் தக்கலை - மருதூர்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு மருதூர்குறிச்சி சி.எஸ்.ஐ சமூகநலக்கூடத்திலும், திருவட்டார் வட்டம் திருவட்டார், அயக்காடு ஊராட்சிகளுக்கு பகுதிகளுக்கு பாய்க்காடு தூய ஆவியார் சமூகநலக்கூடத்திலும், கிள்ளியூர் வட்டம் முன்சிறை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பார்த்திவபுரம் ஸ்ரீ பத்ரா கோவில் மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில் இன்று கிள்ளியூர் வட்டத்துக்குட்பட்ட திப்பிறமலை, கண்ணன்விளை, விளவங்கோடு வட்டத்துக்குட்பட்ட திரித்துவபுரம் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் வீடுகளுக்கு தன்னார்வலர்கள் நேரில் சென்று, உங்களுடன் ஸ்டாலின் திட்ட விண்ணப்பங்கள் மற்றும் மடிப்பேடு வழங்கி, 14 அரசு துறைகள் வாயிலாக வழங்கப்படும் 46 சேவைகள் குறித்தும், பொதுமக்களிடையே விளக்கி கூறுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் பொதுமக்களிடம் அவர்களுடைய தேவைகள் குறித்து கேட்டறியப்பட்டதோடு, அத்திட்டங்களின் பயன்கள் குறித்து விளக்கம் அளித்ததோடு, அத்திட்டங்களுக்கு இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும் நடைபெறுவுள்ள முகாமிற்கு தவறாமல் கலந்துகொண்டு பயன்பெறுமாறு பொதுமக்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

தொடர்ந்து முகாமில் நடைபெறும் மருத்துவ முகாமில் பரிசோதனை மேற்கொண்டு, பயனடையுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு கலெக்டர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள். அதனைத்தொடர்ந்து கலெக்டர் ஆர்.அழகுமீனா, கிள்ளியூர் வட்டம் திப்பிறமலை பகுதியிலும், விளவங்கோடு வட்டம் மேல்புறம் பகுதியிலும் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்

கிள்ளியூர் வட்டாட்சியர் ராஜசேகர் தன்னார்வலர்கள், சமுதாய வள பயிற்றுனர்கள், இல்லம்தேடி கல்வி பணியாளர்கள், சுயஉதவிக்குழுவினர், களப்பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



வளசரவாக்கம் மண்டலம் 154 - வது வார்டு ராமாபுரம் சாந்தி நகர் குடியிருப்பு நல சங்கத்தில் வசித்து வரும் மக்களின் குறைகளை மாமன்ற உறுப்பினர் ராமாபுரம் வ.செல்வகுமார் கேட்டறிந்தார்.

## தரமணி பகுதியில் கத்தி குத்து: ஒருவர் கைது

**சென்னை ஜூலை 14-**

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த நிரஞ்சன்குமார், தரமணி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில், தான் தனது தம்பி சோனுகுமார் மற்றும் நண்பர்களுடன் பெருங்குடியில் வசித்துக் கொண்டு தனியார் நிறுவனத்தில் உதவியாளராக வேலை செய்து வருவதாகவும், நிரஞ்சன்குமார் அவரது நண்பருடன் கடந்த மாதம் 11.ந் தேதிஅன்று இரவு, பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள ஒரு தனியார் நிறுவனம் அருகில் சென்றபோது, அங்கு சாலை ஓரத்தில் தனது தம்பி சோனுகுமார் மயக்க நிலையில் இருந்தபோது, அருகில் அவரது நண்பரான ஜெயகுமார் என்பவர் சோனுகுமாரின் முகத்தில் சோடாவை தெளித்துக் கொண்டிருந்ததாகவும், தான் ஜெயகுமாரிடம் ஏன் எனது தம்பியின் முகத்தில் சோடாவை தெளிக்கிறாய் என கேட்டபோது, ஜெயகுமார் தகாத வார்த்தைகளால் பேசி, தான் கையில் வைத்திருந்த மது பாட்டிலை உடைத்து தனது முகத்தில் தாக்கி கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் தன்னை தாக்கிய ஜெயகுமார் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் குறிப்பிட்டிருந்தார்.

அதன்பேரில், தரமணி காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர். தரமணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட ஜெயகுமார்ப்ல்ல்என்பவரை கைது செய்தனர்.

## சென்னை சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி, தாதண்டர் நகர் அரசு ஊழியர் குடியிருப்பு பகுதிகளில் தூய்மை பணி மேற்கொள்ளும் நடவடிக்கை

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்



**சென்னை,ஜூலை.14**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்மா. சுப்பிரமணியன் அவர்கள், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, வார்டு 169, தாதண்டர் நகர் அரசு ஊழியர் குடியிருப்புப் பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் இன்று முதல் (13.07.2025) தூய்மைப் பணி மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 13, வார்டு 169, தாடண்டர் நகர் அரசு குடியிருப்பு பகுதி, 70.73 ஏக்கர் பரப்பளவு உள்ளடக்கியதாகும். இங்குள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை சுமார் 1844 என கணக்கிடப்பட்டுள்ளது- மேலும் 1500 குடியிருப்புகள் வரவுள்ளன. இவ்வளாகத்தில் தூய்மைப் பணி மற்றும் இதர பராமரிப்பு பணிகள் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்பு வளாகம், பூங்கா, விளையாட்டுத் திடல், சமுதாய கூடம், பள்ளி கட்டிடம், மருத்துவமணை, கடைகள் மற்றும் அரசு அலுவலகங்களில் தூய்மை பணிகள் சரிவர மேற்கொள்ளப்படாததால் இப்பகுதியில் சுகாதார மேம்பாட்டிற்காக துணை மேயர் அறிவுறுத்தலின்படி பொதுப் பணித்துறையிடம் ஒப்புதல் பெறப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியே அர்பேசர் சுமித் நிறுவனம் மூலம் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.இதன்படி தாடண்டர் நகர் அரசு குடியிருப்பு பகுதியில் உள்ள 5440 மீட்டர் நீளம் கொண்ட சாலைகள் மற்றும் இவ்வளாகத்திலுள்ள அனைத்து கட்டிடங்களில் தூய்மைப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது.26 தூய்மை பணியாளர்கள், 14 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு காம்பாக்டர் வாகனம், 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட 46 குப்பைத்தொட்டிகள், 120 லிட்டர் கொள்ளளவு கொண்ட 20 சுழற்சி தொட்டிகள் (Rotomac Bin), 2 சூப்பர்வைசர்கள், ஒரு கனரக வாகன ஓட்டுநர், 2 கனரக வாகன உதவியாளர்கள் இப்பணிக்காக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் துணை மேயர் மகேஷ் குமார், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், கோடம்பாக்கம் மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, உர்பேசர் தலைமை செயல் அலுவலர் முகமது சையத் மற்றும் அலுவலர்கள் குடியிருப்புப் பகுதி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



பெங்களூரில் நடைபெற்ற இன்டர்நேஷனல் பிசினஸ் கான்பிரன்ஸ் நகரத்தார்-2025 என்ற நிகழ்ச்சியில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்ச்சியினை துவக்கி வைத்து விழா சிறப்புரை ஆற்றினர்.

# திமுக அரசு பொறுப்பேற்றபின், எந்த ஆட்சி காலத்திலும் இல்லாத அளவிற்கு அறநிலையத்துறைக்கு

## 1,120 கோடி ரூபாயை அரசே மானியமாக வழங்கியுள்ளது: அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்



சென்னை,ஜூலை.14

வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .எஸ்.முத்துசாமி மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்பி.கே.சேகர்பாபு ஆகியோர் (13.07.2025) ஈரோடு மாவட்டம், திண்டல் அருள் மிகு வேலாயுத சுவாமி திருக் கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளையும், 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பின்படி ரூ.30 கோடி மதிப்பீட்டில் 186 அடி உயர முருகன் சிலை அமைக்கப்படவுள்ள இடத்தி னையும் நேரில் பார்வையி ட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர், இந்து சமய அற நிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவி த்ததாவது, முதலமைச்சர் அவ ர்கள் தலைமையில் திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு திருக்கோயிலின் திருப் பணிகளுக்கு அதிக அளவு முக்கியத்துவம் அளித்து எண் ணிலடங்கா திருப்பணிகள் பெருந்திட்ட வரைவின் வாயி லாக நடைபெற்று வருகின் றன. இந்த பணிகள் எல்லாம் நிறைவுபெறுகின்ற போது மன்னர் ஆட்சி காலத்தில் நடைபெற்ற திருப்பணிகளை விட திராவிட மாடல் ஆட்சி யில் நடைபெற்ற திருப்பணி களின் எண்ணிக்கை அதிக மாக இருக்கும் என்பதை மகி ழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இதுவரை 3,325 திருக்கோ யில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்று உள்ளது. அதில் 125 முருகன் திருக்கோயில்க ளாகும். அறுபடை வீடுகளில் முதல் படை வீடான திருப்ப ரங்குன்றம் அருள்மிகு சுப்பிர மணிய சுவாமி திருக்கோயில் உள்பட 46 திருக்கோயில்களு க்கு நாளை குடமுழுக்கு நடைபெற உள்ளது. இந்தா ண்டு இறுதிக்குள் 3,500 திருக் கோயில்களை எட்டும். இந்த அரசு பொறுப்பேற்றபின், எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலையத்துறைக்கு 1,120 கோடி ரூபாயை அரசே மானியமாக வழங்கியுள்ளது. பெருந்திட்ட வரைவின்கீழ் பழனி திருக்கோயிலில் முதல் கட்டமாக ரூ. 98 கோடி மதிப் பீட்டிலும், இரண்டாம் கட்ட த்தில் ரூ. 58 கோடி மதிப்பீட் டிலும், திருச்செந்தூரில் உபய தாரர் நிதி, திருக்கோயில் நிதி மற்றும் அரசு நிதி ரூ. 416 கோடி மதிப்பீட்டிலும், திருத் தணியில் ரூ. 98 கோடி மதிப் பீட்டிலும், மருதமலை மற் றும் சுவாமிமலையில் மின்தூ க்கி அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. திருச்செந்தூர் திருக்கோயில் திருப்பணிகளில் 70 சதவீத பணிகள் நிறைவுப்பெற்றுள் ளன. வரும் அக்டோபர் மாத த்திற்குள் அனைத்து பணிக ளும் நிறைவு செய்யப்படும். மேலும், திருத்தணி திருக்கோ யிலுக்கும் ரூ. 67 கோடி மதிப் பீட்டில் மாற்றுமலைப் பாதை அமைக்கும் பணியும், சிறுவா புரி திருக்கோயிலுக்கு ரூ. 57 கோடி மதிப்பீட்டில் சாலை விரிவாக்கம் பணிகளும் நடை பெற்று வருகின்றன. வைசம், வைணவம் என அனைத்து திருக்கோயில்களிலும் திருப் பணிகள் மேற்கொண்டு வரு வதோடு தமிழ் கடவுள் முரு கனுக்கு பழனியில் மாநாடு நடத்தி பெருமை சேர்த்த ஆட்சி இந்த ஆட்சியாகும்.

உலகெல்லாம் முருகன் சிலை அமைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு ஸ்தபதிகளை அனுப்பி பார்வையிட்டு விவ ரங்களை சேகரித்து மருதம லை, திண்டல் மற்றும் திமிரி யில் முருகனுக்கு மிக உயர மான சிலைகளை அமைக்க உள்ளோம்.

இந்த சிலைகள் காலங் களை கடந்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவ ர்களின் பெயரை சொல்லும் அளவிற்கு மிக சிறப்பாக அமையும். இந்த அரசு பொறு ப்பேற்றபின், உபயதாரர்கள் மட்டும் ரூ. 1400 கோடி மதிப் பீட்டிலான திருப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஆட்சியில் 10 ஆண்டு களுக்கு மேலாக அனுமதி வழங்கப்படாமல் இருந்த திருச்செந்தூரில் எச்.சி.எல் நிறுவனத்தின் மூலம் ரூ. 200 கோடி திருப்பணிக்கும், பெரி யபாளையத்தில் ரூ. 170 கோடி திருப்பணிக்கும் உடனடியாக அனுமதி வழங்கி பணிகளை மேற்கொண்ட அரசு திராவிட மாடல் அரசாகும். ஈரோடு மாவட்டம், திண்டலில் ஆசி யாவிலேயே மிக உயரமான முருகன் சிலை அமைக்க உப யதாரர்கள் பலர் நிதி வழங்க முன்வருகின்றனர். அனைத்து தரப்பினரும் எதிர்பார்க்கும் வகையில் திண்டலில் முரு கன் சிலை அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டம், திண் டல் அருள்மிகு வேலாயுத சுவாமி திருக்கோயிலில் மிக உயரமான முருகன் சிலை அமைக்க வேண்டுமென முத லமைச்சர் அவர்களிடம் கோரி க்கை வைத்தபோது, உடனடி யாக அனுமதி வழங்கினார் கள். மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இந்தாண்டு அதனை சட்டமன்ற அறிவிப்பாக வெளியிட்டு ஆரம்பகட்ட பணிகள் துரிதமாக நடைபெ ற்று வருகின்றன. முருகன் சிலையானது ஆசியாவி லேயே மிக உயரமாக 186 அடி உயரத்தில் சிமெண்டால் அமைக்கப்பட உள்ளது. இதன் பீடமானது 3.5 அடி உயரத்தில் கருங்கல்லால் அமைக்கப்படும். மலையில் உயரம் 50 அடியாகும். ஆக மொத்தம் மலையில் உயரத் தையும் சேர்த்து 240 அடி உய ரத்தில் முருகன் சிலை அமை யும். இந்த திருக்கோயிலுக்கு தற்போது வரும் பக்தர்கள் கூட்டத்தை போல் 5 மடங்கு கூட்டம் வந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் அனைத்து வசதிக ளும் அமைக்கப்படும். மேலும், இத்திருக்கோயில் சார் பில் இரண்டு திருமண மண் டபங்கள் கட்டும் பணியும், கீழேயுள்ள சிவன் கோயில் திருப்பணியும், இராஜகோபுர திருப்பணியும் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. அனைத்து பணிகளும் தாராளமாக நிதி வழங்க உப யதாரர்கள் முன் வருகின்ற னர். இத்தகைய பணிகளுக்கு உடனுக்குடன் அனுமதி வழ ங்கிய மாண்புமிகு முதலமை ச்சர் அவர்களுக்கு இத்தருண த்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவி த்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணை யர்பி.என்.ஸ் ரீ தர், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் கே. இ. பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர் வி. சி. சந்திரகு மார், மாநகராட்சி மேயர் எஸ். நாகரத்தினம், மாவட்ட வருவாய் அலுவலர் எஸ். சாந்தகுமார், இந்து சமய அற நிலையத்துறை இணை ஆணையர்.அ.தி. பரஞ்சோதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவ லர்கள் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்டத்தில் குட்கா விற்ற 12 பேர் கைது

ஈரோடு, ஜூலை.14–

ஈரோடு மாவட்டத்தில் குட்கா பொருட்கள் விற்பனை முற் றிலுமாக தடுக்கும் வகையில் போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் மாவட்டத்தில் உள்ள மளிகை கடை, பெட்டிக்கடைகளில் நேற்று போலீசார் தீவிர சோதனை மேற்கொண்டனர்.

இதில், குட்கா பொருட்கள் விற்ற நம்பியூர் அடுத்த சூரிய ம்பாளையத்தைச் சேர்ந்த கண்ணம்மாள் ( 65), சண்முகம் (50), விஜயமங்கலம் அடுத்த புதுப்பாளையத்தைச் சேர்ந்த பூபதி ( 63), பவானி காமராஜ் நகரைச் சேர்ந்த நிர்மல்குமார் ( 39), கொடுமுடி அடுத்த காரணம்பாளையத்தைச் சேர்ந்த சுபீர் பேகம் ( 80), புளியம்பட்டி இந்திர நகரைச் சேர்ந்த நாகராஜன் ( 55), தாசப்பகவுண்டன்புதூரைச் சேர்ந்த மாரியம்மாள் ( 55), புதுவ டவள்ளியைச் சேர்ந்த கண்ணப்பன் ( 62), ஈரோடு அடுத்த தண் ணிர்பந்தல் பாளையத்தைச் சேர்ந்த செந்தில்குமார் ( 48), பவா னிசாகர் அடுத்த கூத்தமங்கலத்தைச் சேர்ந்த ரேவதி ( 60), புளி யம்பட்டியைச் சேர்ந்த சுந்தரா ( 60), ரங்கம்பாளையத்தைச் சேர் ந்த ராமசாமி ( 60) ஆகிய 12 பேரையும் கைது செய்த போலீ சார், ரூ.10 ஆயிரம் மதிப்பிலான குட்கா பொருட்களை பறிமு தல் செய்தனர்

## ஈரோடு பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 96.16 அடியாக உயர்வு

ஈரோடு, ஜூலை.14-

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக வும், விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானி சாகர் அணை. 105 அடிகொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்ப குதி உள்ளது. பவானிசாகர் அணையின் மூலம் ஈரோடு, திரு ப்பூர், கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.இ ந்நிலையில் கடந்த சில நாட்களாக நீர்ப்பிடிப்பு பகுதியில் பர வலாக மழை பெய்து வந்ததால் அணையின் நீர்மட்டம் உய ர்ந்து வந்தது. நீலகிரி, கோவை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிக ரிக்க தொடங்கியுள்ளது. இதனை எதிரொலியாக அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.நேற்று காலை நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 96.16 அடியாக உயர்ந்து உள்ளது. காலை அணைக்கு 3,299 கன அடியாக நீர் வந்து கொண்டிருக்கிறது. பவானிசாகர் அணையில் இருந்து குடிநீரு க்காக பவானி ஆற்றுக்கு 100 கன அடி நீரும், தடப்பள்ளி -அ ரக்கன் கோட்டை பாசனத்திற்கு 800 கன அடியும், காலிங்கரா யன் பாசனத்திற்கு 450 கன அடியும், கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு 5 கன அடி நீரும் என மொத்தம் 1,355 கன அடி நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் அதிகரித்து வந்தாலும் மற்ற அணைகள் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி குண் டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் 25.18 அடியாக உள்ளது. இதேபோல் வரட்டுபள்ளம் அணையின் நீர்மட்டம் 22.31 அடி யாக சரிந்து உள்ளது. 30 அடி கொள்ளளவு கொண்ட பெரும் பள்ளம் அணையின் நீர்மட்டம் 14.76 அடியாக சரிந்து உள்ளது.

# ஆந்திராவில் கொலை செய்து சென்னை கூவத்தில் சடலம் வீச்சு: 5 பேர் கைது

சென்னை ஜூலை 14-

ரே ணி கு ண் டா வில் கொலை செய்து, வாலிபர் உடலை சென்னை கூவத்தில் வீசிய ஜனசேனா கட்சியின் மண்டல தலைவர் கைது செய் யப்பட்டார். ஆபாச வீடியோ மற்றும் தெலுங்கு தேச எம்எ ல்ஏவுக்கு உளவு சொன்னதால் வாலிபரை கொன்றதாக கொலையாளிகள் வாக்குமூ லம் அளித்துள்ளனர்.

கடந்த ஜூலை 8ம் தேதிய ன்று, கூவத்தில் ஒரு வாலிப ரின் உடல் கிடப்பதாக வியா சர்பாடி சத்தியமூர்த்தி நகரைச் சேர்ந்த வேலா (வயது 40) என் பவர், ஏழுகிணறு போலீசில் புகார் செய்தார். போலீசார் சம் பவ இடத்திற்கு விரைந்தனர். கூவம் ஆற்றில் மிதந்து கொண்டிருந்த வாலிபரின் பிரேதத்தை கரைக்கு கொண்டு வந்து பரிசோதித்த னர். சுமார் 27 வயது மதிக்கத் தக்க வெளிமாநில நபராக இருந்தார். அவர் டீ-சர்ட், டவு சர் அணிந்திருந்தார், காதில் வளையம் இருந்தது,

கழுத்தில் கயிறால் இறுக் கப்பட்டதற்கான அடையாள மும், வலது கழுத்து முதல் தோள்பட்டை வரை காயமும் காணப்பட்டது. அரசு ஸ்டா ன்லி மருத்துவமனை சவக்கி டங்கிற்கு அனுப்பப்பட்டு, சந் தேக மரணமாக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பூக்கடை உதவி ஆணை யர் தலைமையில், ஏழுகிணறு காவல் நிலைய சட்டம் ஒழு ங்கு ஆய்வாளர் ரத்தினவேல் பாண்டியன் மற்றும் பூக்கடை காவல் நிலைய ஆய்வாளர் புஷ்பராஜ் ஆகியோர் தலை மையிலான காவல் குழு, நவீன தொழில்நுட்ப உதவியு டன் சம்பவ இடத்திற்கு வந்த வாகனத்தின் பதிவு எண் ணைக் கண்டறிந்து விசார ணையைத் தொடங்கினர்.

**கொலை**

ஜூலை 10ம் தேதியன்று ஸ்டான்லி மருத்துவமனை யில் நடத்தப்பட்ட உடற்கூரா ய்வில், இளைஞர் கொலை செய்யப்பட்டது உறுதியா னதை அடுத்து, வழக்கு கொலை வழக்காக மாற்றப்ப ட்டது.விசாரணையில், ஆந்திர மாநிலம் ரேணிகுண்டாவைச் சேர்ந்த சிலர் இந்த சடலத்தை ஏழுகிணறு பகுதியில் உள்ள கூவம் ஆற்றில் வீசிவிட்டு சென்றது தெரியவந்தது. தனி ப்படை போலீசார், வாகன பதிவு எண்ணை வைத்து உரி மையாளரைக் கண்டறிந்து, ரேணிகுண்டா மற்றும் திருத் தணி பகுதிகளில் தேடுதல் வேட்டை நடத்தினர்.

தீவிர விசாரணைக்குப் பிறகு, ஜூலை 11ம் தேதின்று, ஆந்திர மாநிலத்தின் பவன் கல்யாண் கட்சியான ஜனசே னாவை சேர்ந்த சந்திரபாபு (35), மனைவி வினுதா கோட்டா (31) – ஜனசேனா கட்சிஸ்ரீகாளஹஸ்தி தொகுதி மண்டல் தலைவர், ஊழியர் கள் சிவகுமார் (36) – ஜன சேனா கட்சி ஐடி பிரிவு, கோபி (24), , ஓட்டுநர் ஷேக் தாசர் (23) ஆகிய 5 பேரை கைது செய்தனர். கைது செய் யப்பட்டவர்கள் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, சாட்சி கள் மற்றும் வாக்குமூலங்க ளின் அடிப்படையில் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டு, நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்க ளால் பயன்படுத்தப்பட்ட மஹிந்திரா டியூவி -300 கார் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில், இறந்தவர் ஆந்திர மாநிலம் திருப்பதி, ஸ் ரீகாளஹஸ்தி, பக்சிம்பாலத் தைச் சேர்ந்த ஸ்ரீனிவாசலு (எ) ராயுடு (22) என்பது தெரியவந் தது. அவர் 2019 முதல் சந்திர பாபு மற்றும் வினுதா கோட் டாவின் வீட்டில் தங்கி பணி யாற்றி வந்தார்.

**விசாரணை**

கடந்த மார்ச் மாதம், வினுதா கோட்டா தனது படு க்கையறையில் உடை மாற்று ம்போது, ஸ்ரீனிவாசலுவின் செல்போன் கட்டிலுக்கு அடி யில் இருந்தது கண்டறியப்ப ட்டது. அதில் கேமரா இயக்க த்தில் இருந்ததால், சந்தேகம் எழுந்தது.

விசாரணையில், ஸ்ரீனிவா சலு ஜனசேனா கட்சியின் கூட் டணி கட்சியான தெலுங்கு தேசம் கட்சியின் எம்எல்ஏ பஜாலா சுதீர் ரெட்டிக்கு, சந்தி ரபாபு மற்றும் வினுதா கோட் டாவின் ரகசியங்களை பணத் திற்காக விற்றதாகவும், அவர் களின் தூண்டுதலின் பேரில் வினுதாவின் அந்தரங்க புகை ப்படங்களை எடுத்ததாகவும் தெரியவந்தது. இதனால், ஜூன் 21 அன்று ஸ்ரீனிவாசலு எச்சரிக்கப்பட்டு, அவரது பாட்டி ராஜேஸ்வரியுடன் அனுப்பப்பட்டார்.

ஆனால், சமீபத்தில் சந்திர பாபு மற்றும் வினுதா மீண் டும் ஸ்ரீனிவாசலுவை வரவ ழைத்து, 4 நாட்கள் சட்டவிரோ தமாக வீட்டில் கட்டி வைத்து, அடித்து, கட்சி ரகசியங்களை வெளியிட்டது குறித்து விசாரி த்தனர். ஜூலை 7ம் தேதி காலை 8:30 மணியளவில், ஸ் ரீனிவாசலு கழிவறைக்குச் சென்று திரும்பவில்லை. கதவை தட்டியபோது, பயத் தில் தாழிட்டு உட்கார்ந்திருந் தார். உடனே, சந்திரபாபு மற் றும் ஷேக் தாசர் டிரில்லிங் மெஷின் மூலம் கதவை உடைத்து, இரும்பு சங்கிலி யால் ஸ்ரீனிவாசலுவின் கழு த்தை இறுக்கி கொலை செய் தனர்.இந்த சம்பவம் வெளியே தெரிந்தால் எதிர்க்க ட்சியினர் பிரச்சனை செய்ய லாம் என நினைத்து, அதே நாள் மாலை, காரில் சடல த்தை பின் இருக்கையில் வைத்து, சந்திரபாபுவின் மாம னார் பாஸ்கர் ரெட்டிக்கு மரு த்துவ சிகிச்சைக்காக சென்னை அப்பல்லோ மருத் துவமனைக்கு செல்வதாகக் கூறி புறப்பட்டனர். தமிழ் நாடு எல்லையில் கார் பழுதா னதால், மற்றொரு காருக்கு சடலத்தை மாற்றி, சிவகுமார், ஷேக் தாசர், மற்றும் கோபி ஆகியோர் ஏழுகிணறு பகுதி க்கு வந்துள்ளனர்.

பேசின் பாலம் கூவத்தில் தண்ணீர் அதிகமாக சென்ற தால், உடலை கூவத்தில் போட்டால் அப்படியே தண் ணீரில் அடித்துச் சென்று கட லில் போய் கலந்து விடும் என்று நினைத்து உடலை வீசி யுள்ளனர். ஆனால் உடல் கரை ஒதுங்கியதால் மாட்டிக் கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

ஈரோடு நொச்சி நகர்

# செல்வ கணபதி கோவில் மகா கும்பாபிஷேக விழா: திரளான பக்தர்கள் தரிசனம்



ஈரோடு ஜூலை 14-

ஈரோடு மாவட்டம் 46 புதூர் கிராமம் நொச்சி நகர் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ குமரன் கார்டன்சில் ஸ்ரீ செல்வ கணபதி திருக்கோ யில் அமைந்துள்ளது

இக்கோயிலில் மகா கும் பாபிஷேக திருவிழா நேற்று காலை நடைபெற்றது முன் னதாக கடந்த வெள்ளிக்கி ழமை காவிரி ஆற்றுகக்கு சென்று தீர்த்தம் எடுத்துவரப் பட்டு சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் நடை பெற்றது.அதைத் தொடர்ந்து சனிக்கிழமை கணபதி ஹோமம் நவக்கிரகஹோ மம் லட்சுமி ஹோமம் நடை பெற்றது நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை விநாயகர் வழிபாடு செய்யப்பட்டு ஸ்ரீ செல்வ கணபதிக்கு மகா கும் பாபிஷேகம் தொடர்ந்து மகா அபிஷேகம் நடைபெற்றது விழாவை ஒட்டி பொதுமக்க ளுக்கு அன்னதானம் வழங்க ப்பட்டது விழாவில் மொட க்குறிச்சி சட்டமன்ற உறுப்பி னர் சி சரஸ்வதி பைரவ பீடம் ஸ்ரீ விஜய் சுவாமிகள் ஜி 46 புதூர் முன்னாள் தலை வர் ஆர் பிரகாஷ் ஈரோடு மாநகராட்சி 59-வது வார்டு உறுப்பினர் ஸ்ரீ சக்திவேல் முன்னாள் கவுன்சிலர் சிபி சக்ரவர்த்தி உட்பட பலர் கல ந்து கொண்டனர்

கும்பாபிஷேக ஏற்பாடு களை விழா குழுவினர் டி விஜயேந்திரன் சி ராஜ்குமார் ஜி விஸ்வநாதன் எ மணிகண் டன் கே கார்த்திகேசன் மற் றும் ஊர் பொதுமக்கள் செய் திருந்தனர் .

# கூட்டுறவுச் சங்க பணியாளர் நாள் நிகழ்வு: ஊட்டியில் இணை பதிவாளர் தயாளன் தலைமையில் நடந்தது



ஊட்டி, ஜூலை. 14-

கூட்டுறவுத்துறை அமைச் சர் அவர்களின் 2024 - 2025- ஆம் ஆண்டிற்கான சட்டம ன்ற அறிவிப்பில் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்க ளின் குறைகளை தீர்வு செய் யும் வகையில் இரு மாதங்க ளுக்கு ஒரு முறை மண்டல அளவில் பணியாளர் நாள் நிகழ்வு நடத்தப்படும் என அறிவிப்பு வெளியிடப் பட்டது.

அதனடிப்படையில் நீல கிரி மாவட்டத்தில் கூட்டுறவு துறை சார்பில் கூட்டுறவுத் துறை பணியாளர் நாள் நிக ழ்வு உதகமண்டலத் தில் உள்ள கூட்டுறவு சங்கங் களின் இணைப்பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற் றது.

இந்த பணியாளர் நாள் நிக ழ்வு கூட்டுறவு சங்கங்களில் தற்போது பணிபுரியும் பணி யாளர்கள் மற்றும் பணியிலி ருந்து ஓய்வு பெற்ற பணியாள ர்கள் தங்கள் குறைகள் அடங் கிய மனுக்களை நீலகிரி மண் டல இணைப்பதிவாளர் இரா.தயாளன் மற்றும் நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்கு நர் மரு. தே. சித்ரா ஆகியோரி டம் வழங்கினர். பணியாளர் நாளில் 08 பணியாளர்கள் தங் கள் குறைகள் அடங்கிய மனு க்களை வழங்கினர். இம்ம னுவை உரிய சட்டம், விதி கள், அரசாணைகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பதி வாளரின் சுற்றறிக்கைகள் ஆகியவற்றின் படி இரண்டு மாத காலக்கெடுவுக்குள் தீர்வு செய்யப்படும் என நீல கிரி மண்டல இணைப்பதி வாளர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சரகத் துணைப்பதிவாளர் (பொ) மற்றும் மேலாண்மை இயக் குநர் நீலகிரி மாவட்ட நுகர் வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை சி. அய்யனார், குன்னூர் கூட்டு றவு நகர வங்கி செயலாட்சி யர் . சு. குமாரசுந்தரம், துணை ப்பதிவாளர் (பொதுவிநியோ கத்திட்டம்) கமல்சேட், கூட் டுறவு துறை அலுவலர்கள் மற்றும் கூட்டுறவு சங்க பணி யாளர்கள் கலந்து கொண்டனர்.

நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது நமக்கு பெருமை
நாட்டை சுத்தமாக வைப்பது நமது கடமை

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and with in three months thereafter, I, MAHENDRAN.K, D/o, Kasimariappan.S Aged 44 Years, Permanently residing at, 138/205, Chekkedi street 1,Kovilpatti, Thoothukudi District, intend having my Entrollment as an advocate moved before the Bar Council of Tamilnadu,Bar Council Buildings High Court Campus,Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council with in 10 days.

**MAHENDRAN.K**

---

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**
**E.A.No:- 14/2024 in E.P. NO:- 20/2017 in O.S. NO:- 271/2010**

அமிர்தமணி
-மனுதார்/வாதி
எதிர்
1. துரைக்காளை, தா/பெ லேட் அன்னத்தாய், வேலப்பநாடாரூர், சேர்ந்தமரம் கிராமம், சங்கரன்கோவில் வட்டம், தென்காசி மாவட்டம்.
2. லலிதா, தா/பெ லேட் அன்னத்தாய், ஷை முகவரி

அறிவிப்பு

இந்த மனுதார் ஷ நம்பர் நிறைவேற்றுகை மனுவினை தாக்கல் செய்து நிலையில் உள்ள காலத்தில் ஷ நம்பர் வழக்கின் 3ம் எதிர்மனுதார் அன்னத்தாய் அவர்கள் மரணமடைந்த காரணத்தினால் ஷயாரின் சட்டப்படியான வாரீசு சேர்க்க மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ள நிலையில் ஷ நம்பர் மனுவின் பேரில் இந்த எதிர்மனுதார்கள் சமூகம் மன்றத்தில் 17.07.2025ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் இந்த எதிர்மனுதார்களுக்கு எதிராக ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

நீதிமன்ற உத்திரவுபடி
V.சுடலைமுத்து ஈஸ்வரன் B.A.,B.L.,
S.மாடசாமி B.A.,B.L.,
வழக்கறிஞர்கள், சங்கரன்கோவில்.

---

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**
**E.A.No:- 12/2024 in E.P. NO: 20/2017 in O.S. NO:- 271/2010**

அமிர்தமணி,
-மனுதார்/வாதி
எதிர்
மாரிச்செல்வி, லேட்.அருணாசலம், வேலப்பநாடாரூர், சேர்ந்தமரம் கிராமம், சங்கரன்கோவில் வட்டம், தென்காசி மாவட்டம்.
-எதிர்மனுதார்/உத்தேச 12-ம் எதிர்மனுதார்

அறிவிப்பு

இந்த மனுதார் ஷ நம்பர் நிறைவேற்றுகை மனுவினை தாக்கல் செய்து நிலையில் உள்ள காலத்தில் ஷ நம்பர் வழக்கின் 1ம் எதிர்மனுதார் அருணாசலம் அவர்கள் மரணமடைந்த காரணத்தினால் ஷயாரின் சட்டப்படியான வாரீசு சேர்க்க மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ள நிலையில் ஷ நம்பர் மனுவின் பேரில் இந்த எதிர்மனுதார் சமூகம் மன்றத்தில் 17.07.2025ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் இந்த எதிர்மனு தாருக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

நீதிமன்ற உத்திரவுபடி
V.சுடலைமுத்து ஈஸ்வரன் B.A.,B.L.,
S.மாடசாமி B.A.,B.L.,
வழக்கறிஞர்கள், சங்கரன்கோவில்.

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**

ராமசாமி, தபெ. காளியப்ப ரெட்டியார், 2/18-2 வடக்குத்தெரு, சி. குமரெட்டியாபுரம் , குதிரை குளம் கிராமம், கயத்தார் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
-மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர். கயத்தாறு. சார் பதிவாளர், கடம்பூர்.
-எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது தகப்பனார் காளியப்ப ரெட்டியார் தபெ. அய்யாவு ரெட்டியார் என்பவர் கடந்த 10.06.2011 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படு கிறது.

இப்படிக்கு
ராமசாமி,
மனுதார்.

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**

ராமசாமி, தபெ. காளியப்ப ரெட்டியார், 2/18-2 வடக்குத்தெரு, சி. குமரெட்டியாபுரம் , குதிரை குளம் கிராமம், கயத்தார் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
-மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர். கயத்தார். சார் பதிவாளர், கடம்பூர்.
-எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது தாயார் உண்ணாமலை யம்மாள் கபெ. காளியப்ப ரெட்டியார் என்பவர் கடந்த 04.08.1996 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படு கிறது.

இப்படிக்கு
ராமசாமி,
மனுதார்.

---

**மாண்பமை முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**
**S.R.No.10333/2023 in MACOP No. /2024**

மசூதா பேகம் (46/23), க/பெ.சேக் தாவூத், 14-F, நாயக்கர் புதுத்தெரு, சித்தையன் கோட்டை, ஆத்தூர், திண்டுக்கல் மாவட்டம்
---- மனுதாரர்
--- எதிர் ---
மாரிச்சாமி, த/பெ.சுப்பையா, 272/1, யாதவர் தெரு, கோவில்பட்டி-628501.
--- 1-ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

கடந்த 28.7.2022-ம் தேதி ஷை மனுதாரர் தனது கணவருடன் இரு சக்கர வாகனத்தில் மதுரையிலிரு ந்து திண்டுக்கல் செல்லும் NH ரோட்டில் செட்டியபட்டி பெட்ரோல் பங்க் எதிரே வந்தபோது 1-ம் எதிர் மனுதாரருக்கு சொந்தமான TN67-AR-3614 Chevrolet Beat என்ற கார் எமது கட்சிக்காரர் மீது மோதியதில் ஷை மனுதாரருக்கு உடல் முழுவ தும் கொடுங்காயம் ஏற்பட்டு, ஷை நீதிமன்றத்தில் நஷ்டஈடு கோரி மனு தாக்கல் செய்துள்ளார்கள். ஷை வழக்கில் தாங்கள் ஆஜராவதற்கு வரும் 19.07.2025-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. ஷை தேதியில் தாங் கள் நேரில் ஷை சமூகம் நீதிமன்ற த்தில் ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர் மானிக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

G.மஹாராஜன்,B.A.,B.L.,
வழக்கறிஞர், மதுரை.

---

**மாண்புமிகு சிறப்பு மாவட்ட நீதிமன்றம், மதுரை.**
**(FOR M.C.O.P.CASES)**
**M.C.O.P.No: 2438 / 2024**

பாண்டி மற்றும் ஐவர்
---- மனுதாரர்கள்
--- எதிரிடை ---
கிளை மேலாளர் அவர்கள், ATC டயர்ஸ் பிரைவேட் லிமிடெட்., பிளாட் எண்.A-2, சிப்காட், தொழில் வளர்ச்சி பகுதி, கங்கை கொண்டான், திருநெல்வேலி.
--- 1-ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர்கள் இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் மேற்படி 1-ம் எதிர்மனு தாரர் ஆஜராக 04.08.2025-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் தங்களுக்கு ஏதேனும் ஆட் சேபணையிருந்தால் மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்ற த்தில் தாங்கள் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமா கவோ ஆஜராகி தங்களது ஆட் சேபணையை தெரிவித்துக்கொ ள்ள வேண்டியது. தவறினால் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கலா யிற்று.

PAT.S.IYYAPPA KATHIRVEL,
வழக்கறிஞர், மதுரை.

---

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**
**E.A.No:- 13/2024 in E.P. No:- 20/2017 in O.S. No:- 271/2010**

அமிர்தமணி,
-மனுதார்/வாதி
எதிர்
1.வைகுண்டமணி, த/பெ லேட்நாராயணசாமி. வேலப்பநாடாரூர், சேர்ந்தமரம் கிராமம். சங்கரன்கோவில் வட்டம், தென்காசி மாவட்டம்.
2. சொர்ணப்பூ, த/பெ லேட்நாராயணசாமி, வேலப்பநாடாரூர், ஷை முகவரி
-எதிர்மனுதார்கள்/உத்தேச 11,12 எதிர்மனுதார்கள்

அறிவிப்பு

இந்த மனுதார் ஷ நம்பர் நிறைவேற்றுகை மனுவினை தாக்கல் செய்து நிலையில் உள்ள காலத்தில் ஷ நம்பர் வழக்கின் 2ம் எதிர்மனுதார் நாராயணசாமி அவர்கள் மரணமடைந்த காரணத்தினால் ஷயாரின் சட்டப்படியான வாரீசு சேர்க்க மனு தாக் கல் செய்து நிலுவையில் உள்ள நிலையில் ஷ நம்பர் மனுவின் பேரில் இந்த எதிர்மனு தார்கள் சமூகம் மன்றத்தில் 17.07.2025ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் இந்த எதிர்மனுதார்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

நீதிமன்ற உத்திரவுபடி
V.சுடலைமுத்து ஈஸ்வரன் B.A.,B.L.,
S.மாடசாமி B.A.,B.L.,
வழக்கறிஞர்கள், சங்கரன்கோவில்.

## இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட்:
# 9-வது முறையாக 2 அணிகளும் ஒரே ஸ்கோர்: இந்தியா சாதனை



**லண்டன்,ஜூலை 14-**

இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையேயான லார்ட்ஸ் டெஸ்டில் முதல் இன்னிங்சில் இரு அணிகளும் 387 ரன் குவித்தது. டெஸ்ட் வரலாற்றில் முதல் இன்னிங்சில் ஸ்கோர் சமநிலையில் இருப்பது இது 9-வது முறையாகும்.

**ஜோ ரூட் சதம்...**

இங்கிலாந்து, இந்தியா அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி லார்ட்சில் நடந்து வருகிறது. டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 387 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. சிறப்பாக ஆடிய ஜோ ரூட் சதமடித்து 104 ரன்னில் அவுட்டானார். இந்தியா சார்பில் பும்ரா 5 விக்கெட்டும், சிராஜ், நிதிஷ் குமார் ரெட்டி தலா 2 விக்கெட்டும், ஜடேஜா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

**387 ரன்கள்...**

இதையடுத்து, இந்திய அணி முதல் இன்னிங்சில் 387 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. சிறப்பாக ஆடிய கே.எல்.ராகுல் சதமடித்து 100 ரன்னில் அவுட்டானார். இங்கிலாந்து சார்பில் கிறிஸ் வோக்ஸ் 3 விக்கெட்டும், பென் ஸ்டோக்ஸ், ஜோப்ரா ஆர்ச்சர் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து 2 ஆவது இன்னிங்சில் களமிறங்கிய இங்கிலாந்து அணி 3 ஆம் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 2 ரன்கள் எடுத்திருந்தது.

**9-வது முறை...**

இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையேயான லார்ட்ஸ் டெஸ்டில் இரு அணிகளும் முதல் இன்னிங்சில் 387 ரன் குவித்தது. டெஸ்ட் வரலாற்றில் முதல் இன்னிங்சில் ஸ்கோர் சமநிலையில் இருப்பது இது 9-வது முறையாகும். இந்தியாவுக்கு 3-வது நிகழ்வாகும். இதற்கு முன்பு 1958-ம் ஆண்டு வெஸ்ட் இண்டீசுடனும் (222 ரன்), 1986-ம் ஆண்டு இங்கிலாந்து டனும் (390 ரன்) முதல் இன்னிங்சிலும் ஸ்கோர் சமநிலையாக இருந்தது.

**350 ரன்னுக்கு மேல்...**

இந்த தொடரில் இந்திய அணி தொடர்ந்து 5-வது இன்னிங்சில் 350 ரன்னுக்கு மேல் எடுத்துள்ளது. முதல் டெஸ்டில் 471 மற்றும் 364 ரன்னும் 2-வது டெஸ்டில் 587 மற்றும் 427 ரன்னும் குவித்தது. லார்ட்ஸ் டெஸ்டில் முதல் இன்னிங்சில் 387 ரன் எடுத்தது. இங்கிலாந்தில் இந்தியாவுக்கு 2-வது நிகழ்வாகும். இதற்கு முன்பு 2002-ம் ஆண்டு தொடரில் 5 இன்னிங்சில் தொடர்ந்து 350 ரன்னுக்கு மேல் எடுத்து இருந்தது.

## 3-வது டெஸ்ட் போட்டி:
# இங்கிலாந்து அணி தடுமாற்றம்

**லண்டன், ஜூலை 14-**

இந்தியாவுக்கு எதிரான 3-வது டெஸ்டின் 2-வது இன்னிங்சில், இங்கிலாந்து அணி தடுமாறி வருகிறது.

**பும்ரா 5 விக்கெட்...**

இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்சில் நடந்து வருகிறது. இதில் முதலில் ஆடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 387 ரன்கள் எடுத்தது. ஜோ ரூட் சதமும் (104 ரன்), ஜேமி சுமித் (51 ரன்), பிரைடன் கார்ஸ் (56 ரன்) அரைசதமும் அடித்தனர். இந்தியா தரப்பில் பும்ரா 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**கே.எல்.ராகுல் 100...**

இதைத்தொடர்ந்து முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணியும் 387 ரன்னில் ஆல்-அவுட் ஆனது. அதிகபட்சமாக கே.எல்.ராகுல் 100 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து அணி தரப்பில் கிறிஸ் வோக்ஸ் 3 விக்கெட்டும், ஜோப்ரா ஆர்ச்சர், பென் ஸ்டோக்ஸ் தலா 2 விக்கெட்டும், பிரைடன் கார்ஸ், சோயிப் பஷீர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இதைத்தொடர்ந்து இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்சை விளையாடி வருகிறது.

**தடுமாற்றம்...**

தொடக்கத்தில் பென் டக்கெட் 12 ரன்களில் சிராஜ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த ஆலி போப் 4 ரன்களில் வெளியேறினார் . மறுபுறம் நிலைத்து ஆடிய ஜாக் கிராலி 22 ரன்களில் வெளியேறினார் . அடுத்து களமிறங்கிய ஹாரி புரூக் 23 ரன்களில் வெளியேறினார் இதனால் இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறி வருகிறது.

4வது நாள் உணவு இடைவேளை வரை இங்கிலாந்து அணி 4 விக்கெட் இழப்பிற்கு 98 ரன்கள் எடுத்துள்ளது.

**சிராஜ் 2 விக்கெட்...**

ஜோ ரூட் 17 ரன்களும் பென் ஸ்டோக்ஸ் 2 ரன்களும் எடுத்து களத்தில் உள்ளனர். இந்தியா சார்பில் சிராஜ் 2 விக்கெட், நிதி குமார் ரெட்டி, ஆகாஷ் தீப் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர் .

## கடைசி போட்டியில் இங்கி., வெற்றி:
# டி-20 தொடரை கைப்பற்றியது இந்தியா




**லண்டன், ஜூலை 14-**

கடைசி போட்டியில் தோல்வியடைந்த போதும், இங்கிலாந்துக்கு எதிரான டி20 தொடரை இந்தியா 3-2 என கைப்பற்றி அசத்தியது.

**3-1 என முன்னிலை...**

இந்திய மகளிர் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர், 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது. முதல் 4 போட்டிகளில் இந்தியா 3-1 என தொடரை கைப்பற்றியது. இந்நிலையில், இரு அணிகள் மோதும் ஐந்தாவது டி20 போட்டி நடந்தது. டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பவுலிங் தேர்வு செய்தது.

**ஷபாலி வர்மா அதிரடி...**

அதன்படி, முதலில் களமிறங்கிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 167 ரன்கள் எடுத்தது. தொடக்க வீராங்கனை ஷபாலி வர்மா அதிரடியாக ஆடி அரை சதம் கடந்து 75 ரன்னில் அவுட்டானார். இங்கிலாந்து சார்பில் சார்லி டீன் 3 விக்கெட்டும், சோபி எக்கல்ஸ்டோன் 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 168 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து மகளிர் அணி களமிறங்கியது. தொடக்க வீராங்கனைகள் அதிரடியாக ஆடினர்.

**திரில் வெற்றி...**

முதல் விக்கெட்டுக்கு 101 ரன்கள் சேர்த்த நிலையில், சோபியா டங்க்ளே 46 ரன்னில் அவுட்டானார். டேனில் வியாட் ஹாட்ஜ் அரை சதம் கடந்து 56 ரன்னில் வெளியேறினார். பவுசியர் 16 ரன்னில் ஆட்டமிழந்தார். டாமி பியூமாண்ட் 30 ரன்னில் வெளியேறினார். இறுதியில், இங்கிலாந்து அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 168 ரன்கள் எடுத்து திரில் வெற்றி பெற்றது. ஆனாலும், இங்கிலாந்துக்கு எதிரான டி20 தொடரை இந்தியா 3-2 என கைப்பற்றி அசத்தியது.

# ஆஸி.யை 225 ரன்களில் சுருட்டிய மேற்கு இந்தியத் தீவுகள் அணி..!

**கிங்ஸ்டன், ஜூலை 14-**

ஆஸ்திரேலிய அணி உடனான 3-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் அந்த அணியை 225 ரன்களில் ஆல் அவுட் செய்தது மேற்கு இந்தியத் தீவுகள் அணி.

**பகலிரவு போட்டி...**

ஜமைக்காவின் கிங்ஸ்டன் பகுதியில் உள்ள சபீனா கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நேற்று முன்தினம் (ஜூலை 13) தொடங்கியது. இந்தப் போட்டி பகலிரவு போட்டியாக நடைபெறுகிறது. இதில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி பேட் செய்ய முடிவு செய்தது. அந்த அணிக்காக உஸ்மான் கவாஜா மற்றும் சாம் கான்ஸ்டோஸ் இணைந்து இன்னிங்ஸை தொடங்கினர்.

**பார்ட்னர்ஷிப்...**

சாம் கான்ஸ்டோஸ், 52 பந்துகளில் 17 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து 92 பந்துகளில் 23 ரன்கள் எடுத்த கவாஜாவும் ஆட்டமிழந்தார். பின்னர் கேமரூன் கிரீன் மற்றும் ஸ்டீவ் ஸ்மித் இணைந்து 61 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தனர். கிரீன் 46 ரன்களிலும், ஸ்மித் 48 ரன்களிலும் ஆட்டமிழந்தனர்.

**225 ரன்கள்...**

பின்னர் சீரான இடைவெளியில் ஆஸ்திரேலிய வீரர்கள் தங்களது விக்கெட்டுகளை இழந்தனர். வெப்ஸ்டர் 1, டிராவிஸ் ஹெட் 20, அலெக்ஸ் கேரி 21, ஸ்டார்க் 0, கம்மின்ஸ் 24, ஹேசில்வுட் 4 ரன்களில் அவுட் ஆகினர். 70.3 ஓவர்களில் 225 ரன்கள் எடுத்து ஆஸ்திரேலியா ஆல் அவுட் ஆனது. மேற்கு இந்தியத் தீவுகள் அணியின் தரப்பில் ஷமர் ஜோசப் 4 விக்கெட்டுகள் கைப்பற்றி அசத்தி இருந்தார். ஜெய்டன் சீல்ஸ் மற்றும் ஜஸ்டின் கிரீவ்ஸ் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

**விண்டீஸ் பேட்டிங்...**

தொடர்ந்து மேற்கு இந்தியத் தீவுகள் அணி பேட் செய்தது. அந்த அணி முதல் நாள் ஆட்ட முடிவில் 9 ஓவர்களில் 1 விக்கெட் இழப்புக்கு 16 ரன்கள் எடுத்தது. தொடக்க ஆட்டக்காரர் கெவ்லான் ஆண்டர்சன் 3 ரன்களில் ஸ்டார்க் பந்தில் போல்ட் ஆனார். பிராண்டன் கிங் 8, கேப்டன் சேஸ் 3 ரன்கள் உடன் களத்தில் உள்ளனர்.

## கில்லை சமாதானப்படுத்திய டக்கெட்

இங்கிலாந்து, இந்தியா அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி லார்ட்சில் நடந்து வருகிறது. டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 387 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதையடுத்து, இந்திய அணி முதல் இன்னிங்சில் 387 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதையடுத்து 2 ஆவது இன்னிங்சில் களமிறங்கிய இங்கிலாந்து அணி 3 ஆம் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 2 ரன்கள் எடுத்துள்ளது.

இதனிடையே நேற்று முன்தினம் ஆட்டத்தின் கடைசி கட்டத்தில் இங்கிலாந்து வீரர் கிராலி தேவையில்லாமல் நேரத்தை விரயம் செய்ததாகக் கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்ட இந்திய கேப்டன் சுப்மன் கில் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பும்ரா பந்துவீச்சில் தனது கையில் அடிபட்டதாக கூறி கிராலி பிசியோவை கூப்பிட்டார். போட்டியின் கடைசி நிமிடங்களில் வேண்டுமென்றே நேரத்தை வீணடித்து 3 ஆம் நாளில் பேட்டிங் செய்யாமல் தவிர்க்க கிராலி வேண்டுமென்றே பிசியோவை கூப்பிடுவதாக சுப்மன் கில் கோபமடைந்தார். ரிட்டையர்ட் அவுட் முறையில் கிராலி வெளியேறுவதாக கில் சைகை செய்து கிண்டல் செய்தார். இதனால் கிராலி - கில் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. உடனடியாக தலையிட்ட பென் டக்கெட் இருவரையும் சமாதானம் செய்ய முயன்றார். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலானது.

## அன்பளிப்பு வழங்கிய ராகுல்

இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்சில் நடந்து வருகிறது. இதில் முதலில் ஆடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 387 ரன்கள் எடுத்தது. ஜோ ரூட் சதமும் (104 ரன்), ஜேமி சுமித் (51 ரன்), பிரைடன் கார்ஸ் (56 ரன்) அரைசதமும் அடித்தனர். இந்தியா தரப்பில் பும்ரா 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதைத்தொடர்ந்து முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணியும் 387 ரன்னில் ஆல்-அவுட் ஆனது. அதிகபட்சமாக கே.எல்.ராகுல் 100 ரன்கள் அடித்தார். இதைத்தொடர்ந்து இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்சை விளையாடி வருகிறது.

லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் சதமடிப்பது கவுரவமான ஒன்றாக கருதப்படுகிறது. இதனை சிறப்பிக்கும் விதமாக இந்த போட்டியில் சதமடித்த அதிரடி கே.எல்.ராகுல் தான் அணிந்திருந்த ஜெர்சியில் கையெழுத்திட்டு லார்ட்சில் உள்ள அருங்காட்சியத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

## ஆக்ரோஷமாக கொண்டாடிய சிராஜ்

இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்சில் நடந்து வருகிறது. இதில் முதலில் ஆடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 387 ரன்கள் எடுத்தது. ஜோ ரூட் சதமும் (104 ரன்), ஜேமி சுமித் (51 ரன்), பிரைடன் கார்ஸ் (56 ரன்) அரைசதமும் அடித்தனர். இந்தியா தரப்பில் பும்ரா 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதைத்தொடர்ந்து முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணியும் 387 ரன்னில் ஆல்-அவுட் ஆனது. அதிகபட்சமாக கே.எல்.ராகுல் 100 ரன்கள் அடித்தார்.

இதைத்தொடர்ந்து 2-வது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் ஆட்ட நேரம் முடிவில் ஒரு ஓவரை விக்கெட் இழப்பின்றி 2 ரன் அடித்திருந்தது. இத்தகைய சூழலில் 4-வது நாள் ஆட்டம் நேற்று தொடங்கியது. தொடர்ந்து பேட்டிங் செய்த டக்கெட் - கிராவ்லி ஜோடி 6-வது ஓவரில் பிரிந்தது. பென் டக்கெட் 12 ரன்களில் சிராஜ் பந்துவீச்சில் பும்ராவிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினார். விக்கெட் கைப்பற்றியதை சிராஜ் ஆக்ரோஷமாக கத்தி கொண்டாடினார். விக்கெட் வீழ்த்தியவுடன் ஓடிய சிராஜ், டக்கெட்டிடம் முகத்திற்கு நேராக கத்தி வெறித்தனமாக கொண்டாடினார். டக்கெட் அதிருப்தியுடன் வெளியேறினார். இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

## டெஸ்ட் விளையாட ரகானே விருப்பம்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர் ஆன ரகானே கடைசியாக கடந்த 2023-ம் ஆண்டு வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடினார். அதன் பிறகு இந்திய அணியில் இடம் கிடைக்கவில்லை. தற்போது உள்ளூர் தொடர்களில் சிறப்பாக விளையாடி வரும் அவர், மீண்டும் இந்திய அணிக்கு திரும்ப போராடி வருகிறார். இவரது தலைமையில் 2020/21 பார்டர் - கவாஸ்கர் டிராபி தொடரில் இந்தியா 2 - 1 என்ற கணக்கில் ஆஸ்திரேலிய மண்ணில் கோப்பையை வென்றது.

இந்நிலையில் தனக்கு மீண்டும் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட விருப்பம் உள்ளதாக ரகானே தெரிவித்துள்ளார். அதற்காக தொடர்ந்து முயற்சி செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பேசிய அவர் கூறுகையில், "நான் இன்னும் டெஸ்ட் கிரிக்கெட் விளையாட விரும்புகிறேன். டெஸ்ட் கிரிக்கெட் விளையாடுவதில் எனக்கு மிகுந்த ஆர்வம் உள்ளது. ஒரு வீரராக என்னால் கட்டுப்படுத்த முடியாத விஷயங்கள் உள்ளன. வெளிப்படையாகச் சொன்னால், என்னை அணியில் சேர்க்க வேண்டி தேர்வாளர்களுடன் உரையாட முயற்சித்தேன். ஆனால் எனக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை. ஒரு வீரராக என்னால் செய்ய முடிந்த விஷயம் விளையாட வாய்ப்பு கிடைக்கும்போது சிறப்பான ஆட்டத்தை கொடுப்பது மட்டுமே" என்று கூறினார்.

# அதிக சிக்சர்: விவியன் ரிச்சர்ட்ஸ் சாதனையை தகர்த்த ரிஷப் பண்ட்



**லண்டன், ஜூலை 14-**

டெஸ்ட் கிரிக்கெட்டில் இதுவரை 36 சிக்சர்கள் அடித்ததன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இங்கிலாந்துக்கு எதிராக அதிக சிக்சர்கள் அடித்த வீரர் என்ற விவியன் ரிச்சர்ட்சின் சாதனையை ரிஷப் பண்ட் முறியடித்துள்ளார்.

**லார்ட்ஸ் மைதானத்தில்...**

இங்கிலாந்து, இந்தியா இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடந்து வருகிறது. முதல் இன்னிங்கில் இங்கிலாந்து 387 ரன்கள் சேர்த்தது. அதனைத் தொடர்ந்து இந்தியா முதல் இன்னிங்சில் களமிறங்கியது. ஜெய்ஸ்வால் (13), கருண் நாயர் (40), சுப்மன் கில் (16) அடுத்தடுத்து ஆட்டமிழக்க கே.எல்.ராகுல் உடன் ரிஷப் பண்ட் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

**கே.எல்.ராகுல் சதம்...**

மூன்றாவது நாள் ஆட்டத்தில் ரிஷப் பண்ட் 74 ரன்கள் எடுத்திருக்கும்போது ரன் அவுட்டாகி வெளியேறினார். கே.எல். ராகுல்-ரிஷப் பண்ட் ஜோடி 4-வது விக்கெட்டுக்கு 141 ரன்கள் சேர்த்தது. ரிஷப் பண்ட் எடுத்த 74 ரன்னில் 8 பவுண்டரி, 2 சிக்சர்கள் அடங்கும்.

**சாதனை முறியடிப்பு...**


இந்நிலையில், ரிஷப் பண்ட் அடித்த 2 சிக்சர்களையும் சேர்த்து இங்கிலாந்துக்கு எதிராக டெஸ்ட் கிரிக்கெட்டில் இதுவரை 36 சிக்சர்கள் அவர் அடித்துள்ளார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இங்கிலாந்துக்கு எதிராக அதிக சிக்சர்கள் அடித்த வீரர் என்ற விவியன் ரிச்சர்ட்சின் சாதனையை ரிஷப் பண்ட் முறியடித்து, புதிய சாதனை படைத்துள்ளார். இங்கிலாந்துக்கு எதிராக விவியன் ரிச்சர்ட்ஸ் மொத்தம் 34 சிக்சர்கள் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**



திருவண்ணாமலையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் 2 புதிய வழித்தடங்களில் மகளிர் விடியல் பயணத்திட்ட புதிய நகர பேருந்துகளையும், 4 வழித்தடங்களில் புதிய குளிர்சாதன புறநகர் பேருந்துகளையும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் உள்ளனர்.

# வான் இலக்குகளை தாக்கி அழிக்கும் அஸ்திரா ஏவுகணை சோதனை வெற்றி



**புவனேஸ்வர், ஜூலை 14-**

ஒடிசா கடலோர பகுதியில் வான் இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும் அஸ்திரா ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

இதுதொடர்பாக, பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: ராணுவ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான டி.ஆர்.டி.ஓ. இந்திய விமானப் படையுடன் இணைந்து, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விமானத்தில் இருந்து அஸ்திரா ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது. ஒடிசா கடலோர பகுதியில் சுகோய் போர் விமானத்தில் இருந்து வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது. ஆளில்லா விமானங்கள் மூலம் இரு வேறு இடங்களில் அனுப்பப்பட்ட இரு இலக்குகளையும் அஸ்திரா ஏவுகணை துல்லியமாக அழித்தது.

ஏவுகணையின் அனைத்து செயல்பாடுகளும் ஒடிசாவில் உள்ள சந்திப்பூர் ஒருங்கிணைந்த ஏவுகணை சோதனை மையத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகள் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டபோது அவை மிகச்சிறப்பாக செயல்பட்டன என தெரிய வந்தது. இதன்மூலம் பாதுகாப்புத்துறை சார்ந்த தொழில்நுட்ப வளர்ச்சியில் இந்தியா புதிய மைல் கல்லை எட்டி இருக்கிறது. மத்திய பாதுகாப்பு மற்றும் ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் மட்டுமின்றி ஹிந்துஸ்தான் விமான நிறுவனம் உள்பட 50க்கும் மேற்பட்ட பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் அஸ்திரா ஏவுகணை உருவாக்கத்தில் பங்கெடுத்துள்ளன.

இந்நிலையில், அஸ்திரா ஏவுகணை உருவாக்கம் மற்றும் வெற்றிகரமான சோதனையில் பங்கெடுத்த அனைவருக்கும் மத்திய பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்

# சரக்கு ரெயிலில் தீ விபத்து ஏற்பட்ட இடத்தில் அமைச்சர் நாசர் ஆய்வு



**திருவள்ளூர், ஜூலை 14-**

சரக்கு ரெயிலில் தீ விபத்து ஏற்பட்ட இடத்தில் அமைச்சர் நாசர் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை துறைமுகத்திலிருந்து ஆயில் ஏற்றிக் கொண்டு சென்ற சரக்கு ரெயிலில் திருவள்ளூர் ரெயில் நிலையம் அருகே தீப்பிடித்து விபத்து ஏற்பட்டுள்ளது. தீப்பிடித்து பற்றி எரியும் தீயை கட்டுப்படுத்த முடியாமல் தீயணைப்புத்துறையினர் போராடி வருகின்றனர். சம்பவ இடத்தில் மாவட்ட எஸ்.பி. சீனிவாச பெருமாள், மாவட்ட ஆட்சியர் பிரதாப் நேரில் ஆய்வு செய்தனர்.

இதையடுத்து மாவட்ட ஆட்சியர் பிரதாப் செய்தியாளர்களிடம் கூறுகையில், சரக்கு ரெயிலில் ஏற்பட்டுள்ள தீ பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், 1 கி.மீ. சுற்று வட்டாரத்தில் உள்ள மக்கள் பாதுகாப்பாக அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில், சரக்கு ரெயிலில் தீ விபத்து ஏற்பட்ட இடத்தில் அமைச்சர் நாசர் நேரில் ஆய்வு மேற்கொண்டார். தீயணைப்பு பணி குறித்து மாவட்ட ஆட்சியரிடம் அவர் கேட்டறிந்தார். தீ விபத்து ஏற்பட்ட நிலையில் பாதுகாப்பு காரணமாக அருகில் உள்ள வீடுகளில் இருந்து சமையல் சிலிண்டர்கள் அகற்றப்பட்டன. சிலிண்டரை எடுத்து செல்ல அப்பகுதி மக்களுக்கு உதவிய அமைச்சர் நாசர், மக்களுக்கு உணவு வழங்கினார்.

# 3,500 கோவில்களில் இந்த ஆண்டு இறுதிக்குள் குடமுழுக்கு நடத்தப்படும்
## அமைச்சர் சேகர்பாபு தகவல்

**ஈரோடு, ஜூலை 14-**

இந்த ஆண்டு இறுதிக்குள் 3,500 கோவில்களில் குடமுழுக்கு நடைபெறும் என அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.

ஈரோடு திண்டல் மலையில் வேலாயுத சாமி கோவில் உள்ளது. இந்து அறநிலைதுறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த கோவிலில் தற்போது ராஜகோபுரம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதைத்தொடர்ந்து கோவில் முன்பு 186 அடி உயரத்தில் முருகன் சிலை அமைக்க முடிவு செய்யப்பட்டு அதற்கான பணி தொடங்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளை நேற்று காலை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, தமிழக வீட்டு வசதித்துறை அமைச்சர் முத்துசாமி ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர் அமைச்சர் சேகர்பாபு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- மன்னர் ஆட்சி காலத்தை விட திராவிட மாடல் ஆட்சியில் திருப்பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் 3,500 கோவில் திருப்பணிகள் நிறைவடைந்து குடமுழுக்கு விழா நடைபெறும். இந்த ஆக்கபூர்வமான பணிக்கு துறையின் சார்பில் கேட்கப்படும் நிதிகள் வழங்கப்படுகிறது. இதுவரை 1,120கோடி ரூபாய் அரசிடம் இருந்து மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 124 திருக்கோவில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

இந்த ஆட்சியில் அனைத்து சைணவம், வைணவம் கடவுளுக்கும் சிறப்பு சேர்ப்பதுடன் முருகனுக்கு மாநாடு நடத்தி பெருமை சேர்த்தவர் முதல்வர் ஸ்டாலின் தான். ஆசியாவில் மிக உயரமான 186 அடி உயரத்தில் சிலை அமைக்கும் பணிகள் ஈரோடு திண்டல் கோவிலில் அமைக்கப்பட்ட உள்ளது. உலக அளவிலான தொழில் நுட்பத்தை பயன்படுத்தி காலம் கடந்து நிற்கும் வகையில் ஈரோடு திண்டல் முருகன் கோவிலில் சிலை அமைக்கப்படும். இந்த ஆட்சியில் மட்டும் 1,400கோடி ரூபாய் வரை உபயதாரர்கள் நிதி வந்துள்ளது, கடந்த எந்த ஆட்சியில் இது போன்ற உபயதாரர்கள் நிதி வந்ததில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## ராணிப்பேட்டை அருகே சோகம்:
# குட்டையில் மூழ்கி 3 சிறுவர்கள் பலி

**ராணிப்பேட்டை, ஜூலை 14-**

குட்டையில் குளிக்கச் சென்ற 3 சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் ராணிப்பேட்டையில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ராணிப்பேட்டை மாவட்டம் பாணாவரம் அருகே உள்ள கிராமம் மேட்டு குன்னத்தூர். இந்த ஊரைச் சேர்ந்த சரவணன் மகன் புவனேஸ்வரன் (7 வயது), கோபி என்பவரது மகன்கள் மோனி பிரசாத் (9 வயது) மற்றும் சுஜன் (7 வயது) ஆகிய 3 சிறுவர்களும் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதால் அந்த பகுதியில் உள்ள குட்டைக்கு குளிக்கச் சென்றுள்ளனர்.

ஆழமான பகுதியில் அவர்கள் குளித்துக் கொண்டிருந்த நிலையில் எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கினர். இதைக் கண்ட அக்கம் பக்கத்தினர் சிறுவர்களை மீட்க முயற்சித்தனர். அவர்களால் முடியாததால் உடனடியாக பாணாவரம் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் 3 சிறுவர்களையும் மீட்டு பாணாவரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் மூவரும் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதையடுத்து மூவரின் உடல்களும் பிரேத பரிசோதனைக்காக சோளிங்கர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக பாணாவரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். குட்டையில் குளிக்கச் சென்ற 3 சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

( 14.07.2025 முதல் 20.07.2025 வரை )

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்—கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி -

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு கிடைக்கும். காரியத் தடைகள், சுறுசுறுப்பு இல்லாத நிலை உருவாகும். பக்தி, ஞானம் மேலிடும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் தங்கள் புகழும் மரியாதையும் கூடும். பயணத்தில் மகிழ்ச்சி நிலவும். நல்ல நண்பர்கள் மற்றும் உறவினர் அனுசரணை இருக்கும். அரசு வகை இலாபங்கள் ஏற்படும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டங்கள் ஏற்பட்டு, வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். சிலருக்கு புத்திர பாக்கியம், புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படும். குடும்பத்தில் மன அமைதி பெற வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. நறுமணப் பொருட்கள் மற்றும் நவநாகரீக வீட்டு உபயோகப் பொருட்கள் வியாபாரம் சூடுபிடிக்கும்.

பரணி -

இந்த வாரம் உங்களுக்கு கல்வியில் வெற்றி கிடைக்கும். உயர் அதிகாரிகளின் உதவி மற்றும் ஒத்துழைப்பு கிடைக்கும். பயணங்களில் எச்சரிக்கை தேவை. சிலருக்குப் தொழிலில் பண முடக்கம் ஏற்படலாம். பட்டம், பதவிகள் ஆகியவை கிடைக்கும். தாயின் மூலம் இலாபம் ஏற்படலாம். கற்பனை வளம் பெருகும். போட்டி பந்தயங்கள் அரசு வகை இலாபம், வீட்டில் சுபகாரியங்கள், வெளியிடங்களில் வெற்றிக்கான பாராட்டுக்கள் ஆகியவை ஏற்படும். தம்பதிகளுக்கு இடையே அன்பு மிகுந்து ஒருவருக்கொருவர் அனுசரித்துப் பேரின்பம் அடைவர். தீயகுணமுடைய நண்பர்களை ஒதுக்குவது நல்லது. குழந்தைகளின் முன்னேற்றம் கண்டு மனம் மகிழ்ச்சி அடையும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.-

இந்த வாரம் தொலைதூர சுபச் செய்திகள் கேட்டு மனம் மகிழும். பலரும் வியக்கும் வண்ணம் பற்பல சாதனைகளைப் புரிந்து பாராட்டு பெறுவீர்கள். வியாபாரத்தில் புதிய தொடர்புகள் ஏற்பட்டு முன்னேற்றத்துக்கான வழிகள் பிறக்கும். அரசு வகையில் கட்ட வேண்டிய வரி பாக்கிகள் செலுத்துவதற்கு தேவையான பணவரவுகள், பணவுதவி கள் வந்து சேரும். தரும காரியங்கள் மற்றும் தெய்வ வழிபாடு ஆகியவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளுடன் வீண் விவாதங்களை தவிர்த்து முன்னேற்றம் அடைய முற்படுவது நல்லது. மனதுக்குப் பிரியமான மனைவியிடம் அன்பு பாராட்டி, அமைதியாக இருந்தால் ஆனந்தம் பெருகும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு உண்டு. வெளியூர் அலைச்சல்கள் அதிகரிக்கும். ஞானிகளின், பெரியவர்கள் சந்திப்பால் மன அமைதியும், சந்தோஷமும் பெருகும். சிலருக்கு எடுத்த முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். விருந்தினர் வருகையால் வீட்டில் கும்மாளமும், குஷியாக வும் இருக்கும். தங்கள் கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தந்தை வழி உறவுகளால் வீண் செலவுகள் அதிகரிக்கும். பெண்களுக்கு அழகிய ஆடை அபரண சேர்க்கை ஏற்படும். சிலருக்கு வீடு, தொழில் அல்லது இடமாற்றம் ஏற்படலாம்.

ரோகிணி –

இந்த வாரம் தனலாபம் எதிர்பார்க்கலாம். பிறரின் உதவியை நாட வேண்டிய சூழ்நிலை எழலாம். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் எடுப்பதை ஒரு சில நாட்களுக்குத் தள்ளிப் போடுவது நல்லது. அடிக்கடி அலைச்சல்கள் ஏற்படலாம். தூய ஆடைகளை அணிந்து மிடுக்காக, நல்ல காரியங்கள் செய்து நல்லவர் என அனைவரின் பாராட்டுதல்களையும் பெறுவர். சிலர் வீண் வார்த்தைகளை பேசுவதன் மூலம் வேண்டாத பகையை தேடிக் கொள்வர். அரசு மூலம் எதிர்பார்த்த ஆதாயங்கள் எளிதாகக் கிடைக்கும். கேளிக்கை ஈடுபாடு, இனியது புசித்தல் மற்றும் ஸ்திரீ சுகம் என பொழுது இனிமையாக கழியும். சிலருக்குத் தொடர் பணியின் காரணமாக வேளாவேளைக்கு உணவருந்தாமல் நிலை ஏற்படும்.

மிருகசிரீஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு, புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். ஆசிரியர்களின் ஆலோசனைப்படி ஆழ்ந்து படிப்பதன் காரணமாக அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள். சிலருக்கு வாழ்க்கையில் புதுப்புது மாற்றங்கள் ஏற்படலாம். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் உங்கள் எதிர்பார்ப்புக்கும் மேலாக பல வழிகளிலும் பணவரவு அதிகரிக்கும். சிலருக்கு நல்ல ஆன்மிக குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படுத்துவார். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். சிலருக்குத் திருமண ஏற்பாடுகள் நடைபெறலாம்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் உங்கள் அசாத்தியத் திறமைகளை வெளிக் காட்டுவதன் மூலம் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நல்ல சேதிகள் நாடிவரும். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான தகவல்கள் வந்து சேரும். வாரத்தின், முதல் நாள் பயணத்தில் துன்பமும், பின்னர் வரும் நாட்களில் கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும். எனவே இன்பம் வரும் போது மகிழ்ச்சியில் பொங்குவதும், துன்பம் வரும் போது துவளுவது தானே வாழ்க்கை. இரண்டையும் சமமாக பாவித்தல் துன்பமும் இன்பமாகும்.

திருவாதிரை ---

இந்த வாரம் உங்களுக்கு பணம் சம்பாதிப்பதில் ஆர்வம் அதிகரிக்கும். அதன் காரணமாக அதிகம் உழைப்பீர்கள். அரசியல் செய்பவர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு ஓங்கும். அறிவுத் திறனும் கூடும். சிலர் பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. இனிய புதிய நண்பர்களிடம் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. சிலருக்கு பிரிவும், பகையும் ஏற்படலாம். தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதன் வருவாய் பெருக்கமும் ஏற்படும். புதிய வாகன யோகம் ஏற்படலாம். யாத்திரையும், வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் உங்களுக்கு தந்தையால் நன்மைகள் பல ஏற்படும். மகான்களின் தரிசனம் கிட்டும். புதிய முயற்சிகள் மேற்கொள்ளும் போது அது விஷயமாக பயணங்கள் செல்லும் நிலை ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். பெண்களுக்கு வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வாக்கு வன்மையால் வருமானம் பெருகும். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் பெறுவதில் எவ்விதச் சிக்கல்களும் ஏற்படாது.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் எதிர்பாராத இனிய விருந்துகள், மகிழ்ச்சி கொண்டாட்டங்கள் ஏற்படும். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். அரசாங்கத்திடம் வேண்டப்பட்ட கோரிக்கைகள் தடங்கலின்றி நிறைவேறும். நல்லோர் சேர்க்கையால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல தேர்ச்சி ஏற்படும். சிலருக்கு உழைப்புக் குறைவானாலும் ஆதாயம் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் ஆதரவால் சிலர் மேன்மை அடைவீர்கள். எப்போதாவது வரும் கோபத்தை அடக்குவது நல்லது. சிலருக்குத் தொழிலில் புதிய வாடிக்கையாளர்கள் மூலம் அதிகமான வருவாய் பெருக்கம் ஏற்படும்.

பூசம் --

இந்த வாரம் திருமணம் போன்ற சுப காரியங்களுக்கு செலவுகள் ஏற்படும். புதுப்புது முயற்சிகளால் செல்வ நிலை உயரும். வியாபாரிகள் வாடிக்கையாளரிடம் மிகுந்த நட்பு பாராட்டி அதிக இலாபம் சம்பாதிப்பது. அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவால் ஆதாயம் ஏற்படும். துணிவுடன் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். சிலருக்கு அவ்வப்போது சிறு காரியத் தடைகள் ஏற்படலாம். தூக்கமின்மையால், சுறுசுறுப்பற்ற நிலை ஏற்படும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. வாக்கு வன்மையால் வருமானம் பெருகும். சில மாணவர்கள் கல்வியில் உயர்நிலை எய்துவர். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும்.

ஆயில்யம் –

இந்த வாரம் மனைவியின் அன்பால் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். பெரியோரின் ஆதரவும் உதவியும் கிடைக்கும். அதன் காரணமாக உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். தொழில் அபிவிருத்திக்காக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். வீட்டுக்குத் தேவை என்று விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். புதிய ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் தொடங்க அரசுக் கடன்கள் தடையின்றி கிடைக்கும். புத்தக அச்சு மற்றும் வெளியீடு சம்பந்தமான தொழில்கள் வங்கிக் கடன் உதவியுடன் வெற்றி பெறும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், நட்பும் கிடைக்கும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் இரண்டும் கலந்த வாரம். ஞானிகளின் உபதேசம் கேட்டு மனம் ஞானத் தன்மைக்கு மாறும். அரசுப் பெண் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீண் கோபத்தால் விவேகத்தை இழக்காதீர்கள். தங்கள் சிறப்பான, திறமை மிக்க பணி அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டு, பாராட்டும் பெறும். மேடைப் பேச்சாளர்களுக்கு மேன்மையான நிலை ஏற்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும்.

பூரம் –

இந்த வாரம் உங்களுக்கு எதிர்பார்த்த அளவு தனவரவு உண்டு. உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி ஏற்படும். தெய்வ சிந்தனையாலும், தரும சிந்தனையாலும் மனதில் அமைதி நிலவும். தொழில் வாய்ப்புகள் பெருகும். உடன் பணிபுரியும் பணியாளர்களின் பொறுப்பு மிக்க பணியால் உற்பத்தி பெருகும். பங்குச் சந்தை மூலம் பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு ஏற்றமிகு வாரம். சிலருக்குப் பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் முதல் நாளும், 4, 5 மற்றும் 6 நாட்களும் உங்களுக்கு சிறப்பான பலன்களைத் தரும். எதிர்பாராத தனவரவு மனம் மகிழும். ஆறுவது சினம் என சினத்தை அடக்கினால் சிரமங்கள் குறையும். போட்டி, பொறாமைகளை அகற்றி தன்னம்பிக்கையோடு செயல்பட்டால் முன்னேற்றங்கள் சுலபமாகும். திடீர்ப் பயணங்கள் மூலமாக ஆதாயங்கள் ஏற்படும். சிலர் பழைய கடன்களை அடைத்து புதிய கடன்கள் வாங்க முயல்வீர்கள். உயர் அதிகாரிகளின் உந்துதலால் ஏற்படும், இடைவிடாத பணி காரணமாக நேரத்திற்கு உணவு உண்ண இயலாமல் போகும். புதிய வியாபாரத் திட்டங்கள் வெற்றி பெறுவதோடு, நல்ல காலம் கனிந்து வரும். அரசு அதிகாரிகள் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிறப்பான காலம். அதன் காரணமாக வங்கி சேமிப்புக் கணக்குகளில் இருக்கும் கையிருப்பு பணம் அதிகரிக்கும். பங்குச் சந்தை ஈடுபாடு இலாபம் பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை. புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். மேல்மட்ட அதிகாரிகளின் ஆதரவும், புதிய தொடர்புகள் நன்மையும் ஏற்படும்.

அஸ்தம் –

இந்த வாரம் எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும். மந்திர சித்தி செய்யும் காரியங்களில் வெற்றி கிட்டும். பெரிய மனிதர்களின் மற்றும் பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். தன வருமானம் அதிகரிப்பதால் அனைத்துக் காரியங்களும் அனுகூலமாக இருக்கும். கேளிக்கை விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப்பெரிய சாகசங்களை புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். குழந்தைகளின் செயல்கள், சில நேரங்களில் அவமானப்படும் நிலை ஏற்படும்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். உங்கள் பணி கண்டு மற்றவர்களின் பாராட்டை கேட்டு மகிழ்வார்கள். சிலருக்கு மற்றவர்களை ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு இனி நல்ல காலம் பிறக்கும். மாணவர்கள் தங்கள் கிரகிப்பு தன்மையால் கல்வியின் தரத்தை உயர்த்தி கொள்வர். விற்பனைப் பிரதிநிதிகளின் வருமானம் தங்கள் பேச்சுத் திறனால் அதிகரிக்கும். குடும்ப வாழ்க்கையில் சந்தோஷம் நிலைத்திருக்கும். பணிபுரியும் பெண்களுக்குத் தங்கள் நிறுவனத்தில் சம்பள உயர்வு கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும் விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். தங்கள் சகோதரனின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் பெண்களால் இலாபம் ஏற்படும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் நீங்கள் எதிர்பார்த்த இலக்கை எட்டிவிடுவீர்கள்.

சுவாதி –

இந்த வாரம் உங்கள் சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில்கள் வரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பெண்களுக்கு பணியிடத்தில் மற்றவர்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் செலவுகள் அதிகமாகும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு எப்போதும் உங்கள் பையை பணத்தால் நிரப்பும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் மூலம் உதவிகள் தடைப்படாது. எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். புதிய பெண்களிடம் பேசும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் பேசவும். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபடுவது, இழப்பை தவிர்க்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் இந்த வாரம் மேற்கொள்ளப்படும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளுக்கு நல்ல உயர்வான முன்னேற்றங்கள் ஏற்படும்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் சுக சௌகரியங்கள் சேரும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். சிலருக்கு அதிகாரப் பதவிகள் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து சேரும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய நிலை ஏற்படும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைக்க வேண்டியது வரும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பெண்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்

அனுஷம் –

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் மூலம் உதவிகள் தடைப்படாது. உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபடுவது, இழப்பை தவிர்க்கும் எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும்.

கேட்டை –

இந்த வாரம் உங்களுக்கு உழைப்பு அதிகமாகி. அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைக்காது. ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். முன்னெச்சரிக்கையாக மருத்துவ பரிசோதனைகள் செய்து கொள்வது நல்லது. உங்கள் செயல்திறன் அதிகரிகரித்துச் செல்வாக்கும் பெருகும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். சிலருக்கு அதிகாரமுள்ள உயர் பதவி கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். பயணங்களிலும் எச்சரிக்கை தேவை.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் பொன் ஆபரணங்கள் விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியமும், புதுத் தெம்பும், புத்தொளியும் ஏற்படும். பணக்கார மனைவியும் அமைவாள். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுஜனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும்.

பூராடம் –

இந்த வாரம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் அனைத்துச் செயல்களும் வெற்றி பெறும். ஆனால், தொழில் விஷயமாக எடுக்கும் முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக முயற்சிகள் தேவைப்படும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். அரசு பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் பல வழிகளிலும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் தங்கள் அனுசரணையால் சீர்படும். சிறந்த எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். அன்பான உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், அதிகச் செலவுகளும் ஏற்படும். உங்கள் சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். பக்தி மிக்க புண்ணிய தல யாத்திரைகள் ஏற்படும். மேம்படும் பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடுவதால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பூமி, வீடு ஆகியவற்றின் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும்.

திருவோணம்-

இந்த வாரம் உங்கள் மூலதனத்தைக் கொண்டு புதிய முதலீட்டுத் திட்டங்களை செயல்படுத்த முற்படுவீர்கள். நீண்ட நாட்களாக வருவார்கள் என எதிர்பார்த்த நெருங்கிய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்காது. பெண்கள் தாங்கள் பணிபுரியும் இடங்களில் தங்கள் திறமைகளை நிலைநாட்டி புகழ் பெறுவர். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு கடின உழைப்பு தேவைப்படும். வீட்டில் நவீன உபகரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும். இதுவரை கடினமாக இருந்த காரியங்கள் கூட எளிதில் கைகூடும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் தாராளமான தன வரவு வரும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். உயர் அதிகாரிகளின் சொல் கேட்டு நடப்பது முன்னேற்றத்தை அளிக்கும். வியாபாரிகள் வாடிக்கையாளர்களுக்கு இலவச பரிசுகள் கொடுத்து நீங்கள் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். பிரிந்த தம்பதிகள் இணைந்து மகிழ்வர். எதிரிகளின் திட்டங்களை சமயோஜிதமாக செயல்பட்டு முறியடிப்பீர்கள். குடும்பத்தில் சுப காரியங்களுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடக்கும். புத்திரர்களால் ஜெயமுண்டு. நவீன காலத்துக்கு ஏற்றபடி புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். அரசுப் பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிந்து, அதிகாரிகள் பாராட்டுதல்களை பெறுவார்கள்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் உங்கள் பணவரவு அதிகரிக்கும். புதிய முதலீட்டுத் திட்டங்களில் உங்கள் பணத்தை முதலீடு செய்து தொழிலை விருத்தி செய்வார்கள். விருந்தினர்கள் வருவர். விருந்தாடி மகிழ்வைத் தருவர்.. நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். பயணங்கள் இனிமை தரும். சினிமா, டிராமா எனப் பொழுதுபோக்குகளில் குடும்பத்தோடு ஈடுபட்டு மகிழ்வீர்கள். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்காது. வீட்டில் நவீன உபகரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும். இதுவரை கடினமாக இருந்த காரியங்கள் கூட எளிதில் கைகூடும்.

சதயம்-

இந்த வாரம் குடும்பத்தோடு குதூகலமாக இருக்கப் போகும் குஷியான வாரம். அரசுப் பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்கள் விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கும். உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் தொல்லை குறையும். அரசு பணிபுரியும் பெண்களுக்கு உயர் அதிகாரிகளின் தயவால் பணியில் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கும். அனைத்து முயற்சிகளிலும் அவர்கள் வெற்றியும் பெறுவார்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்களு தேர்வு முடிவுகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பணவரவு அதிகரிப்பதால் மனக்களிப்பு கூடும் வாரம். உங்கள் புதிய முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். புனித பயணங்கள் மேற்கொள்வீர்கள். எல்லோருடனும் பழகும் உங்கள் சகஜமான குணத்தால் விஐபி களின் நட்பு உருவாகும். அவர்கள் மூலமாக ஆதாயங்கள் பெறும் நிலையும் ஏற்படும். சந்தோஷங்கள் நிலவும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண ஏற்பாடுகள் நடக்கும். தொடுத்த வழக்குகள் வெல்லும். உயர் பதவிகளுக்கான வாய்ப்புகள் பெருகும். தாய் வழியில் ஆதாயம் உண்டு. பால் வளம் பெருகும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே நடத்தி முடிப்பீர்கள். அதிகாரம் பண்ணும் தலை பதவி கிடைக்கும். பலவகைப் பயணங்களும் அதனால் இலாபமும் ஏற்படும்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் குடும்பத்தில் கலகங்களும், குழப்பங்களும் நிகழலாம். ஓய்வெடுத்து, உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லையே. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. பல நாள் கனவுகள் நனவாகும். பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. சிலருக்குப் பிறர் பொல்லாப்பு காரணமாக பயம் தோன்றலாம். தெய்வபலம் இருப்பதால் நேர்மை மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றால், வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அடைவீர்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சி தனை அனுபவிப்பீர்கள்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் கல்வி கேள்விகளில் தேர்ச்சி ஏற்படும். சுபச் செய்திகள் மனமகிழ்ச்சி தரும். தனவரவு அதிகமாவதால் தான தருமங்கள் ஈடுபாடு ஏற்படும். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களால் அதிக இலாபம் அடைவர். பெண்கள்! தங்கள் இல்லத்தில் மிக மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்கள் தூள் பரத்தும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அடைவீர்கள். மாணவர்கள் கருத்தோடு படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். பெண்களால் சந்தோஷம் இருக்கும். வாகனங்களில் செல்லும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் செல்லவும். நல்ல நண்பர்களுடன் பழகுவது நல்லது. தீய குணமுள்ள நண்பர்களைத் தவிர்க்கவும். உங்கள் மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும்.

ரேவதி-

இந்த வாரம் உறவுகள், உள்ளங்கவர் நண்பர்கள் மற்றும் மங்கையர்கள் ஆகியோர் உதவிக்கரம் நீட்டுவதால் உள்ளம் மகிழும். பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும். மால் போன்ற இடங்களில் மனதுக்கு இனிய அவர்களுடன் சுற்றி, உணவகத்தில் இனியதாய் புசிப்பீர்கள். சிலருக்குப் பொருள் சேதமும், புதிய கடன்கள் ஏற்படும். அதிகாரிகளிடம் அடங்கி நடப்பது நல்லது. பெரியவர்கள் பேட்டியும், ஞானிகள் தரிசனம் கிடைக்கும். பல சாதனைகள் புரிவார்கள். பிறருடன் வீண் மனஸ்தாபங்கள் தவிர்க்கவும். வியாபார விரிவாக்கம் பற்றி தங்கள் கூட்டாளியின் ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும், சிறப்பானதாகவும் இருக்கும்.



திருவண்ணாமலை மாவட்டம் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள் குறித்த கலந்துரைடல் கூட்டத்தின்போது மகளிர் சுய உதவிக்குழுவினர் நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர்

### இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட

# 7 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மத்திய அமைச்சருக்கு முதல்வர் கடிதம்

சென்னை, ஜூலை 14-

மீனவர்களையும் அவர்களது மீன்பிடி படகுகளையும் விரைவில் விடுவிக்க அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.;

இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பதாவது:- இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்ட மற்றொரு துயர சம்பவத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்று (13.07.2025) அதிகாலையில், ஏழு மீனவர்கள், அவர்களின் இயந்திர மீன்பிடி படகுடன் கைது செய்யப்பட்டனர். அதே நாளில், மற்றொரு சம்பவத்தில், மற்றொரு இயந்திர படகு இலங்கை கடற்படை கப்பலால் மோதப்பட்டதாகவும், படகின் பின்புறம் குறிப்பிடத்தக்க சேதத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிய வருகிறது. மீண்டும் மீண்டும் நிகழும் இந்த சம்பவங்கள் மிகவும் கவலையளிக்கின்றன. அவை நமது மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், அவர்களின் குடும்பங்களை நீண்டகால பொருளாதார நெருக்கடி மற்றும் தொடர்ந்த துயரங்களுக்கும் உள்ளாக்குகின்றன. 2024-ம் ஆண்டு கைது செய்யப்பட்ட மீனவர்களில் பலர் இன்னும் இலங்கை காவலில் உள்ளனர் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். தற்போது, 232 தமிழக மீன்பிடி படகுகளும் 50 மீனவர்களும் இன்னும் இலங்கை அதிகாரிகளால் சிறைபிடித்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த தொடர்ச்சியான அச்சங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க, கிடைக்கக்கூடிய அனைத்து தூதரக வழிகளையும் மேற்கொள்ளுமாறு மத்திய அரசை கேட்டுக் கொள்கிறேன். கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடி படகுகளையும் விரைவில் விடுவிக்க அவசர மற்றும் பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# 6 மாவட்டங்களில் கனமழைக்கு...(1-ம் பக்க தொடர்ச்சி)

பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் இன்று ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை, வழக்கத்தை விட 7 டிகிரி ஃ பாரன்ஹீட் வரை அதிகரிக்கக் கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 80 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக் கூடும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# மக்கள் எதிர்பார்ப்பை...(1-ம் பக்க தொடர்ச்சி)

சாதனைகளும் 2026-ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாகத் தொடர்ந்திட ஜூலை 1 முதல் ‘ஓரணியில் தமிழ்நாடு’என்ற உறுப்பினர் சேர்ப்புத் திட்டத்துடனான பிரச்சாரப் பயணத்தையும் முதல்வர் தொடங்கி வைத்தார்.

### உறுதி செய்யும் வகையில்

தமிழ்நாட்டுக்கான திட்டங்களை புறக்கணித்து, தமிழ் பண்பாட்டின் பெருமையை நிராகரித்து, தமிழ் மொழி வளர்ச்சிக்கு நிதி வழங்காமல் வஞ்சித்து, தமிழ்நாட்டு மக்களிடையே மதவாத பிரிவினையை உருவாக்க நினைப்பவர்களுக்கும், அவர்களுக்குத் துணை போகிற துரோகிகளுக்கும் தமிழ்நாட்டில் இடமில்லை என்பதை மக்கள் உறுதி செய்யும் வகையில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ முன்னெடுக்கப்படுகிறது.

### மக்களை நேரில் சந்தித்து

‘ஓரணியில் தமிழ்நாடு’செயலி 234 தொகுதிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் பயிற்சி பெற்றுள்ள தகவல் தொழில்நுட்ப அணியின் நிர்வாகிகள், 234 தொகுதிகளிலும் உள்ள 68 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குச்சாவடிகளில் நியமிக்கப்பட்டுள்ள கழகத்தின் இளம் நிர்வாகிகளுக்கு பயிற்சியளித்து, மாவட்ட - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் நிர்வாகிகள் வழிகாட்டுதலுடன் அவரவர் வாக்குச்சாவடிக்குப் பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று, மக்களை நேரில் சந்தித்து, திராவிட மாடல் அரசின் திட்டங்களால் அந்தக் குடும்பம் பெற்றுள்ள பயன்களை உறுதி செய்து, ஓரணியில் தமிழ்நாட்டைக் கட்டமைக்கும் பணியை மேற்கொண்டு வருகிறார்கள்.

### முறியடித்து கடக்கும்...

தொண்டர்களையும் பொதுமக்களையும் அரவணைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாதை தெளிவானது. பயணம் உறுதிமிக்கது. இடையூறுகள் - அவதூறுகள் எதுவாக இருந்தாலும் அவற்றை முறியடித்து கடக்கும் வலிமை கொண்டது என முதல்வர் குறிப்பிட்டு அனைத்து உடன்பிறப்புகளையும் ஒன்றிணைத்து பெருமைமிக்க கழகத்தின் உடன்பிறப்பே உன்னால் உருவாகும் “ஓரணியில் தமிழ்நாடு”என்று பெருமையோடு குறிப்பிட்டுள்ளார். இதில், இதுவரை 77,34,937 பேர் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளார்கள்.

### முதல்வர் கேட்டறிந்தார்

மேலும், முதல்வர் மு.கஸ்டாலின் உடன்பிறப்பே வா! எனும் தலைப்பில் தொகுதி வாரியாக கழக நிர்வாகிளை சந்தித்து கலந்துரையாடி, அவர்களுக்கு உற்சாகமூட்டி, புத்தகங்கள் வழங்கி கலந்துரையாடி தொகுதி நிலவரங்கள் குறித்து கேட்டறிந்து வருகிறார். அதில், தலைவருடனான பல பழைய பசுமையான நினைவுகளை நிருவாகிகள் நினைவுப்படுத்தி மகிழ்ந்தார்கள். முதல்வர், கழக நிர்வாகிகளிடம் அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளில் கழக ஆட்சியின் மீது ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் ஆகியோரின் ஆதரவு எப்படி உள்ளது. மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் எனக் கேட்டறிந்தார். ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் உறுப்பினர் சேர்க்கை அதிகப்படுத்த வேண்டும் என்றும், அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அனைவரும் அதில் தாமாகவே முன்வந்து இணைத்து கொள்ளும் அளவிற்கு தாங்கள் பணியாற்ற வேண்டும் எனவும் அறிவுரைகள் வழங்கி வருகிறார்.

### சிறப்பாக எடுத்துரைக்க

மேலும், மாணவ- மாணவிகள், பெண்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் அரசு செயல்படுத்தி வரும் சிறப்பான திட்டங்களையும், சாதனைகளையும் அவர்களிடம் எடுத்துச் சொல்லி திராவிட மாடல் அரசின் செயல்பாடுகளை விளக்க வேண்டும் எனவும் அறிவுரைகள் வழங்கினார். தமிழ்நாடு அரசின் திட்டங்களை பொதுமக்கள் அறிந்திடும் வகையில் சிறப்பாக எடுத்துரைக்க வேண்டும் என்றும் குறிப்பாகப் பெண்களுக்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், விடியல் பயணம் திட்டம், புதுமைப் பெண் திட்டம் மற்றும் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் போன்ற மக்களின் பேராதரவு பெற்ற திட்டங்களையும், அதன் பலன்களையும் எடுத்துரைக்க வேண்டும் என்றும், இதில் எந்தவித சுணக்கமுமின்றி விழிப்புடன் பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### மிகுந்த உற்சாகத்தை...

தி.மு.க. நிர்வாகிகளுடன் கலந்துரையாடியபோது, முதலில் அவர்களின் சொந்த தொழில், விவசாயப் பணிகள், குடும்ப நிலவரங்கள், அவர்களது வேலைகள் குறித்து கேட்டறிந்து அவர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கியது என்பது, நிர்வாகிகளுக்கு மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது.

மேலும், அவர்கள் பகுதிகளில் உள்ள பொதுநல கோரிக்கைகளான உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து கேட்டறிந்து, உடனடியாக சம்மந்தப்பட்ட அமைச்சர்களை நிர்வாகிகளின் முன்னிலையிலேயே தொடர்பு கொண்டு பல கோரிக்கைகளை நிறைவேற்றியதற்கு நிர்வாகிகள் தங்களது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர்.

### அதிகம் உழைக்க தயார்

மக்கள் ஆதரவு பெருகப் பெருக பொறுப்பும், கடமையும் கூடுகிறது. எதிர்பார்ப்பு அதிகம் ஆகிறது. அதனைக் காப்பாற்ற நாம் அனைவரும் கடினமாக உழைத்தாக வேண்டும். உழைக்க வேண்டும்.

அதிகமாக உழைக்க நான் தயாராக இருக்கிறேன். வளர்ச்சி என்பது என்னால் மட்டும் ஆனதல்ல; உங்கள் ஒவ்வொருவரின் ஆக்கபூர்வமான நடவடிக்கையால் வளர்ந்து வரும். இந்த வெற்றியை பெற்றுத்தர நீங்கள் அனைவரும் அயராது பாடுபட வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### இன்று கோலாகலமாக நடக்கிறது

# திருப்பரங்குன்றம் கோவில் கும்பாபிஷேகம்

திருப்பரங்குன்றம்,ஜூலை14-

திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் இன்று (ஜூலை 14) அதிகாலை 5:25 மணி முதல் காலை 6:10 மணிக்குள் கும்பாபிஷேகம் நடக்கிறது.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் முதல் படை வீடு எனும் சிறப்பு பெற்ற திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மூலவர்கள் சுப்பிரமணிய சுவாமி, கற்பக விநாயகர், துர்க்கை அம்மன், சத்தியகிரீஸ்வரர், பவளக்கனிவாய் பெருமாள் திருஉருவங்கள் மலையின் அடிவாரப் பாறையில் குடைந்து வடிவமைக்கப்பட்ட குடவரை கோயிலாகும்.

திருப்பணிகள் நிறைவடைந்து ஜூலை 10ல் யாக சாலை பூஜை துவங்கியது. நாளை அதிகாலை 5:25 மணியிலிருந்து காலை 6:10 மணிக்குள் கும்பாபிஷேகம் நடக்கிறது. அதே நேரத்தில் பரிவார தெய்வங்களுக்கும் கும்பாபிஷேகம் நடக்கிறது. பின்பு மூலவர்களுக்கு மகா அபிஷேகம், தீபாராதனை நடக்கிறது. பக்தர்கள் மீது 10 ட்ரோன்கள் மூலம் புனித நீர் தெளிக்கப்பட உள்ளது.

மூலவர் சுப்பிரமணிய சுவாமி முன்புள்ள நிலையில் ஏற்கனவே தங்க தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மற்ற மூலவர்களான கற்பக விநாயகர், துர்க்கை அம்மன், சத்தியகிரீஸ்வரர், பவளக்கனிவாய் பெருமாள் சன்னதிகளின் முன் உள்ள நிலைகளில் உபயதாரர் மூலம் வெள்ளி தகடுகள் பொருத்தப்படுகின்றன. மூலஸ்தானத்திலுள்ள பக்தர்கள் உள்ளே நுழையும் பகுதியிலுள்ள பித்தளை கதவில் சேவல் உருவமும், வெளியேறும் பகுதியிலுள்ள பித்தளை கதவில் மயிலின் உருவமும் பெயின்ட்டால் வரையப்படுகிறது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு உணவு பாதுகாப்பு துறை ஆய்வாளர்கள் ராஜேந்திரன், மோகன் ஆகியோர் பெரியரதவீதி, கீழரதவீதி, மேல ரத வீதி சன்னதி தெரு உட்பட குன்றத்திலுள்ள அனைத்து டீ, வடைக்கடைகள், ஓட்டல்களில் ஆய்வு நடத்தினர். ஊரின் அனைத்து பகுதிகளிலும் ஒலி பெருக்கிகள் மூலம் பக்தி பாடல்கள், திருப்புகழ் முற்றோதுதல், பன்னிரு திருமுறை தமிழ் வேத பாராயணம், தவில், நாதஸ்வர இசை ஒலிபரப்பப்படுகிறது. யாகசாலை பூஜை துவங்கியவுடன் சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் ஒளிபரப்பப்படுகிறது. ராஜகோபுரம், கோயிலின் முன் பகுதி 16 கால் மண்டபம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

# 2-ம் கட்ட பிரச்சார சுற்றுப்பயணம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, ஜூலை 14-

மக்களைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம் பிரச்சார சுற்றுப்பயணத்தின் 2-ம் கட்ட சுற்றுப்பயண அட்டவணையை எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.



இது குறித்து அ.தி.மு.க. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், “ கழகப் பொதுச் செயலாளரும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், தமிழக முன்னாள் முதல்வருமான எடப்பாடி மு. பழனிசாமி, ‘மக்களைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம்’ என்ற லட்சியத்தோடு, 24.7.2025 முதல் 8.8.2025 வரை இரண்டாம் கட்டமாக, கீழ்க் கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு, சட்டப்பேரவைத் தொகுதி வாரியாக, தொடர் பிரச்சார சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளார். விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில் அவர் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

அதன்படி, 24.07.2025 – புதுக்கோட்டை வடக்கு கந்தர்வகோட்டை ஆலங்குடி புதுக்கோட்டை தெற்கு அறந்தாங்கி

25.07.2025 – புதுக்கோட்டை வடக்கு விராலிமலை புதுக்கோட்டை புதுக்கோட்டை தெற்கு திருமயம்

26.07.2025 – சிவகங்கை காரைக்குடி

30.07.2025 – சிவகங்கை மானாமதுரை ராமநாதபுரம் பரமக்குடி திருவாடாணை ( சு.ளு. மங்கலம் )

31.07.2025 – ராமநாதபுரம் ராமநாதபுரம் முதுகுளத்தூர் தூத்துக்குடி வடக்கு விளாத்திகுளம்

1.08.2025 – தூத்துக்குடி வடக்கு கோவில்பட்டி ஒட்டப்பிடாரம் தூத்துக்கடி தெற்கு தூத்துக்குடி

2.08.2025 – தூத்துக்குடி தெற்கு திருச்செந்தூர் ஸ்ரீவைகுண்டம் திருநெல்வேலி புறநகர் ராதாபுரம் (வள்ளியூர்)

4.08.2025 – திருநெல்வேலி மாநகர் திருநெல்வேலி பாளையங்கோட்டை திருநெல்வேலி புறநகர் நாங்குநேரி

5.08.2025 – திருநெல்வேலி புறநகர் அம்பாசமுத்திரம் தென்காசி தெற்கு ஆலங்குளம் தென்காசி

6.08.2025 – தென்காசி வடக்கு கடையநல்லூர் வாசுதேவநல்லூர் (புளியங்குடி) சங்கரன்கோவில்

7.08.2025 – விருதுநகர் மேற்கு ராஜபாளையம் ஸ்ரீவில்லிபுத்தூர் சிவகாசியில் பயணம் செய்கிறார்.

அவரது பயணத்திற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஆர்.ஜெ.தமிழ்மணி கல்வி அறக்கட்டளை சார்பில் மதுரை பழங்காநத்தம் பகுதியில் பொதுமக்களுக்கு நாவலர் சோமசுந்தர பாரதியார் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற கண் சிகிச்சை முகாம் மற்றும் இலவச பொது மருத்துவ முகா முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் அறக்கட்டளை சேர்மன் ஜெயந்தி ராஜூ, டிரஸ்டிகள் கணேஷ்பிரபு, ரம்யா கணேஷ்பிரபு, விஷ்ணுசாகர், வருண்சாகர், மெடிக்கல் குபேந்திரன் மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பைக்காரா கருப்பசாமி, ஏ.பார்த்திபன், வி.பி.ஆர்.செல்வகுமார், ஜெ.மாணிக்கம், பகுதி முத்துவேல், ஆர்.பாஸ்கரன், மார்க்கெட் மார்நாடு, தங்கபாண்டி, திடீர்நகர் பாலா, எம்.ஏ.நாசர், பழங்காநத்தம் ராஜாராம், வக்கீல் பாலமுருகன், சி.ஆர்.கதிரவன், லக்கி முனீஸ் ஆகியோர் உள்ளனர்.



தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தலைமையில் திருப்புவனம் காவல் நிலைய காவல்நிலைய மரணத்தை கண்டித்தும், கொலைக்கு நீதி வேண்டியும் நேற்று சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் த.வெ.க.வை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கல்லனை கிராமத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமியின் 71-வது பிறந்த நாளையொட்டி முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் நலத்திட்ட உதவி மற்றும் அன்னதானம் வழங்கும் விழாவை தொடங்கி வைத்தார்.